தினபூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 268 ஆவணி 18
Regd. No.CBE/090/2011-2013
கோவை, புதன், செப்டம்பர் 03, 2025
‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**கச்சத்தீவை எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்கவே மாட்டோம்: இலங்கை அதிபர் திட்டவட்டம்**
....2-ம் பக்கம்

**பி.ஆர்.எஸ். கட்சியில் இருந்து சந்திரசேகர ராவின் மகள் கவிதா திடீர் சஸ்பெண்ட்**
...3-ம் பக்கம்

**உடற்தகுதி சோதனை: ரோகித், சுப்மன் கில் தேர்ச்சி பெற்றார்களா?**
....6-ம் பக்கம்





ஜெர்மனியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாடு மற்றும் தொழில் அதிபர்களுடனான சந்திப்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசிய காட்சி. இந்நிகழ்வில் ஜெர்மனியை சேர்ந்த தொழில் அதிபர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஜெர்மனியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# 7,020 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 26 நிறுவனங்களுடன் ஒப்பந்தம்

## தமிழ்நாட்டில் புதிதாக 15,320 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்

சென்னை, செப். 2-

**ஜெர்மனியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்7,020 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 26 நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டதன் மூலம் தமிழகத்தில் புதிதாக 15,320 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.**

முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க அரசு முறை பயணமாக ஜெர்மனி, இங்கிலாந்து நாட்டிற்கு சென்றுள்ளார். நேற்று ஜெர்மனியில் முதல்வர் மு .க .ஸ்டாலின் தமிழ்நாடு ரைசிங் ஜெர்மனி முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்று பேசினார்.இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:- 23 புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு ரைசிங் ஜெர்மனி முதலீட்டு இயக்கத்தின் ஒரு பகுதியாக ஜெர்மனியில் நடைபெற்ற தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.3,819 கோடி மதிப்பிலான 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

இந்த ஒப்பந்தங்கள் தமிழ்நாட்டில் 9,070 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும். இதன்மூலம், முதல்வர் மு.க.ஸ்டாலினின் வருகையால் ஜெர்மனியில் 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் கையெழுத்திடப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ.7020 கோடியாக உயர்ந்து, 15,320 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.

இதில் நார்-பிரெம்ஸ் (ரூ.2000 கோடி முதலீடு மற்றும் 3,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), நோர்டெக்ஸ் குழுமம் (ரூ.1000 கோடி முதலீடு மற்றும் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), மற்றும் ஈபிஎம்-பாப்ஸ்ட் (ரூ.201 கோடி முதலீடு மற்றும் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்) முன்னர் கையெழுத்திடப்பட்ட மூன்று முக்கிய ஒப்பந்தங்களும் அடங்கும்.

முக்கியமாக, தமிழ்நாட்டில் ஏற்கனவே செயல்பட்டு வரும் பல நிறுவனங்கள் மீண்டும் முதலீடுகள் செய்து விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ள முன்வந்துள்ளன. இது தமிழ்நாட்டின் ஒப்பற்ற தொழில்துறை, சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நிர்வாகத்திறன் மீதான நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வாகன கூறுகள், தொழில் துறை உபகரணங்கள் மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் உலகளாவிய தலைவர்களை இந்த மாநாடு ஒன்றிணைத்தது. முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களாக வென்சிஸ் எனர்ஜி (ரூ.1068 கோடி முதலீடு மற்றும் 5,238 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் ), பி.ஏ.எஸ்.எப். (ரூ.300 கோடி முதலீடு மற்றும் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), பெல்லா பிரீமியர் ஹேப்பி ஹைஜீன் (ரூ.300 கோடி முதலீடு மற்றும் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), ஹெர்ரெனக்னெக்ட் இந்தியா (ரூ.250 கோடி முதலீடு மற்றும் 400 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்), பல்ஸ் (ரூ.200 கோடி முதலீடு மற்றும் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் ), விட்சென்மேன் இந்தியா (ரூ.200 கோடி முதலீடு மற்றும் 450 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்) மற்றும் மாஷ் எனர்ஜி (ரூ.200 கோடி முதலீடு மற்றும் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள்) ஆகியவை அடங்கும்.

நவீன சுகாதாரம் மற்றும் மருத்துவத் தயாரிப்புகளில் பெல்லா பிராண்டைத் தொடர்ந்து போலந்தை தலைமையிடமாக கொண்ட பன்னாட்டு நிறுவனமான பெல்லா ஹைஜீன், திண்டுக்கல் மாவட்டத்தில் அதன் நவீன சுகாதாரப் பொருட்கள் உற்பத்தி வசதியை விரிவுபடுத்துகிறது. ஆட்டோமொபைல் துறைக்கான நெகிழ்வான உலோக குழல்கள் மற்றும் விரிவாக்க இணைப்பான்களில் முன்னணியில் உள்ள ஜெர்மனி நிறுவனமான விட்சென்மேன் குழுமம், தமிழ்நாட்டில் ஆட்டோ மோடிவ் மற்றும் தொழில் துறை பயன்பாடுகளுக்கான உற்பத்தியை விரிவுபடுத்துகிறது.

(கடைசி பக்கம் பார்க்க)

பா.ஜ.க. அரசின் பல்வேறு தடைகளை கடந்து

# 364 வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, செப். 03-

**பா.ஜ.க. அரசின் தடைகளைக் கடந்து, சொன்ன சொல்லைக் காப்பாற்றியுள்ளோம் என தெரிவித்துள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின், தேர்தல் வாக்குறுதிகளில் 364 வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம் என்று பெருமிதம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளதாவது., சொன்னதையும் செய்திருக்கிறோம்; சொல்லாததையும் செய்திருக்கிறோம். தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் கூறிய 505 வாக்குறுதிகளில், நமது திராவிட மாடல் அரசு 364 வாக்குறுதிகளை நிறைவேற்றி, 40 வாக்குறுதிகள் பரிசீலனையில் உள்ளதைத் தக்க தரவுகளோடு அமைச்சர்கள் தங்கம் தென்னரசு , சிவ சங்கர், கோவி செழியன் ஆகியோர் விளக்கியுள்ளனர்.

இன்னும் ஒருபடி மேலே சொன்னால், காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண்,தமிழ்ப்புதல்வன் போன்ற இந்தியாவுக்கே முன்னோடியாகச் செயல்படுத்தப்படும் முத்திரைத் திட்டங்கள் தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிடப்படாதவை. முந்தைய ஆட்சியின் பத்தாண்டுகால நிதி நிர்வாகச் சீர்கேடு, கொரோனா நெருக்கடி, தமிழ்நாட்டை வெல்ல முடியாத ஒன்றிய பா.ஜ.க. வன்ம அரசின் ஓரவஞ்சனை போன்ற தடைகளைக் கடந்து, சொன்ன சொல்லைக் காப்பாற்றியுள்ளோம். என தெரிவித்துள்ளார்.

மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரம்:

# கவர்னர் சூப்பர் முதல்வராக நினைத்து செயல்பட முடியாது

## சுப்ரீம் கோர்ட்டில் தமிழ்நாடு அரசு வாதம்

புதுடெல்லி, செப். 03-

**மசோதாக்களை உயிரற்றதாக்கும் அதிகாரம் கவர்னருக்கு இல்லை என்று சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு வாதிட்டது. மேலும், கவர்னர் சூப்பர் முதல்வராக நினைத்து செயல்பட முடியாது என்றும் தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.**

மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் கவர்னருக்கு உத்தரவிடக் கோரும் தமிழ்நாடு அரசின் ரிட் மனுவை சுப்ரீம் கோர்ட் விசாரித்து கடந்த ஏப்ரல் 8-ம் தேதி தீர்ப்பு கூறியது. அதில் கவர்னர்கள் அனுப்பி வைக்கும் மசோதாக்கள் மீது ஜனாதிபதி 3 மாதங்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அதை எதிர்த்து மாநில அரசுகள் சுப்ரீம் கோர்ட்டில் ரிட் மனு தாக்கல் செய்ய முடியும் என்றும் தெரிவித்திருந்தது.

இதற்கிடையே சுப்ரீம் கோர்ட் ஆலோசனை கருத்தை பெறும் வகையில் ஜனாதிபதி 14 கேள்விகளை எழுப்பி அனுப்பியிருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பான மனுவை தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதிகள் சூர்யகாந்த், விக்ரம்நாத், பி.எஸ்.நரசிம்மா, அதுல் எஸ். சந்துருக்கர் அடங்கிய அரசியல்சாசன அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த நிலையில், இந்த விவகாரம் குறித்து தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் 6-வது நாளாக நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழ்நாடு அரசின் சார்பில் மூத்த வக்கீல் அபிஷேக் மனு சிங்வி ஆஜராகி வாதிட்டார். அப்போது அவர் கூறியதாவது:-

கவர்னர் திருப்பி அனுப்பும் மசோதாவை மீண்டும் நிறைவேற்றி அனுப்பும் அதிகாரம் சட்டப்பேரவைக்கு உள்ளது. அதேபோல, மாறும் சூழல், கொள்கைகள் காரணமாக அதனை மீண்டும் நிறைவேற்றாமல் கைவிடும் அதிகாரமும் சட்டப்பேரவைக்கு உண்டு. ஆட்சி மாற்றம் அல்லது கொள்கை மாற்றம் என்று மசோதாவை கவர்னர் நிறுத்திவைக்க அல்லது கைவிட அதிகாரம் இல்லை.

கவர்னர் தனிப்பட்ட முறையில் எந்த மசோதா மீதும் முடிவெடுக்க முடியாது. கவர்னர் சூப்பர் முதல்வராக நினைத்து செயல்பட முடியாது. கவர்னர் ஒரு மசோதாவை நிறுத்தி வைத்தாலே அது செயலிழந்ததாகவும், உயிரற்றதாகவும் கூற முடியாது.

அந்த அதிகாரத்தை கவர்னருக்கு அரசியல் சாசனம் வழங்கவில்லை. அதே நேரத்தில், சட்டப்பேரவை கூடாத நேரத்தில் அமைச்சரவையின் ஆலோசனைப்படி அவசர சட்டங்களுக்கு ஒப்புதல் வழங்க கவர்னருக்கு அதிகாரம் உள்ளது. இவ்வாறு அவர் வாதிட்டார். தொடர்ந்து மனு தொடர்பான விசாரணை நடந்து வருகிறது.

# மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயருகிறது

## விரைவில் அறிவிப்பு வெளியாகும்

புதுடெல்லி, செப். 03-

**ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலத்தின் அகவிலைப்படி, தீபாவளிக்கு முன்பாக அறிவிக்கப்படும் என்று தெரிகிறது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

7-வது ஊதிய குழுவின் கீழ், மத்திய அரசு ஊழியர்களுக்கு ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் அகவிலைப்படி நிர்ணயிக்கப்படுகிறது. தற்போது அவர்களின் அடிப்படை சம்பளத்தில் 55 சதவீதம் அகவிலைப்படியாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஜூலை ஆகிய 6 மாதங்களின் அடிப்படையில் இந்த அகவிலைப்படி உயர்வு இருக்கும்.

மத்திய அரசின் புள்ளியியல் துறை அதிகாரிகள் நாடு முழுவதும் உள்ள நுகர்வு பொருட்களின் விலைவாசியை கணக்கில் கொண்டு ஒவ்வொரு மாதமும் விலைக் குறியீட்டு எண்ணை கணக்கிடுவர். அதனடிப்படையில் இந்த அகவிலைப்படி உயர்வு வழங்கப்படுகிறது. அதன்படி 2025 ஜனவரியில் மத்திய, மாநில அரசு ஊழியர்கள் 55 சதவீத அகவிலைப்படி பெற்று வருகின்றனர். தொழிலாளர் பணியகம் வெளியிட்ட தரவுகளின்படி, 2025 ஜூன் மாதத்துக்கான நுகர்வோர் விலைக்குறியீடு 145 ஆக இருந்தது.

2024-ஆம் ஆண்டின் ஜூலை மாதம் முதல் 2025 ஜூன் மாதம் வரையிலான 12 மாத சராசரி குறியீடு 143.6 ஆகும். கடந்த ஜனவரிக்கு பின் புள்ளியியல் துறை எடுத்த கணக்கீடுப்படி, விலைக்குறியீடானது ஜனவரியில் 56.3 என்று இருந்தது. பிப்ரவரியில் 56.6 என்றும், மார்ச்சில் 57.0 ஆகவும், ஏப்ரலில் 57.6 ஆகவும். மே மாதத்தில் 57.8 ஆகவும் உயர்ந்தது. ஜூனில் இது 58.17 ஆக அதிகரித்து உள்ளது. எனவே இவ் விலைக்குறியீட்டின் அடிப்படையில் 3 சதவீத விலைப்படி உயர்வு வழங்கப்பட உள்ளது.

இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும். அதில் ஜூலை 1 முதல் கணக்கிட்டு நிலுவை தொகையாக வழங்கப்படும். ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலத்தின் அகவிலைப்படி, தீபாவளிக்கு முன்பாக அறிவிக்கப்படும் என்று தெரிகிறது. அகவிலைப்படி உயர்வு மத்திய அரசு ஊழியர்களின் சம்பள உயர்வில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். அவர்களுடைய சம்பளம் பெரிய அளவில் உயரும். அகவிலைப்படி அதிகரிப்புடன், பயணப்படி மற்றும் வீட்டு வாடகைப்படியும் அதிகரிக்கும். இந்த அறிவிப்பை தொடர்ந்து மாநில அரசு ஊழியர்களுக்கும் 3 அகவிலைப்படி சதவீத உயர்வை தமிழக அரசு அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்திய தயாரிப்பு ‘சிப்’புகள் உலகில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும்

## பிரதமர் நரேந்திரமோடி பேச்சு

புதுடெல்லி, செப். 03-

**சிறிய இந்திய தயாரிப்பு ‘சிப்’புகள் உலகில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.**

டெல்லியில் இந்தியா செமிகான் 2025 என்ற திட்டத்திற்கான தொடக்க நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பேசினார். அப்போது, உலகளாவிய அரை மின்கடத்தி சூழலியலில், இந்தியாவின் வளர்ச்சிக்கான பங்கு பற்றி அவர் சுட்டி காட்டி பேசினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது, இந்தியாவில் தயாரிக்கப்படும் சிறிய ‘சிப்’புகள் உலகில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் நாள் வெகுதொலைவில் இல்லை. நாம் தாமதத்துடன் இதனை தொடங்கியபோதும், ஒருவராலும் நம்மை தற்போது நிறுத்த முடியாது என்பதும் கூட உண்மை என்றார். உலகம் இந்தியாவை நம்புகிறது. இந்தியாவின் மீது உலகம் நம்பிக்கை வைத்துள்ளது. இந்தியாவுடன் அரை மின்கடத்தி கட்டமைப்பை ஏற்படுத்த உலக நாடுகள் தயாராக உள்ளன என அவர் கூறினார். இந்நிகழ்ச்சியில், 40 முதல் 50 நாடுகள் பங்கேற்றிருப்பது கூட இந்தியாவின் புதிய கண்டுபிடிப்பு மற்றும் இளைஞர் சக்தி ஆகியவற்றின் மீது உலகம் வைத்துள்ள நம்பிக்கையை பிரதிபலிக்கிறது என்றார்.

# நடப்பாண்டில் 6-வது முறை நிரம்பியது மேட்டூர் அணை

சென்னை, செப். 03-

**நடப்பாண்டில் 6வது முறையாக மேட்டூர் அணை நிரம்பியுள்ளது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 31,854 கன அடியில் இருந்து 36,985 கன அடியாக அதிகரித்துள்ளது.**

மேட்டூர் அணையின் மொத்த நீர்மட்டம், 120 அடி ஆகும். தமிழகம் - கர்நாடகா எல்லையிலுள்ள நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால், காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மேட்டூர் அணை நீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது.

நேற்று காலை நடப்பாண்டில் மேட்டூர் அணை 6வது முறையாக நிரம்பி உள்ளது. அணைக்கு நீர்வரத்து 31,854 கன அடியில் இருந்து 36,985 கன அடியாக அதிகரித்துள்ளது. 23 ஆயிரத்து 300 கன அடி நீர் டெல்டா மற்றும் கால்வாய் பாசனத்திற்கு வெளியேற்றப்பட்டு வருகிறது.

தற்போது அணையில் நீர்மட்டம் 120 அடியை எட்டியது. கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புடன் இருக்கும்படி வருவாய்த்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வங்கக்கடல் பகுதியில்

# புதிய புயல் சின்னம் உருவானது

புதுடெல்லி, செப். 03-

**வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில், வரும் 7ம் தேதி வரை மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இந்திய வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வடகிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது.அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறும். வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்துவரும் 24 மணி நேரத்தில் ஒடிசா நோக்கி செல்ல வாய்ப்பு உள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகம், புதுச்சேரி, காரைக்காலில், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகத்தில், வரும் 7ம் தேதி வரை மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகம், புதுச்சேரி, காரைக்காலில், வரும் 5-ம் தேதி வரை அதிகபட்ச வெப்ப நிலை இயல்பை விட, 3 டிகிரி செல்ஷியஸ் அதிகமாக பதிவாகலாம். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், வானம் ஓரளவு மேகமூட்டமாக காணப்படும். ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -206.61 | - 45.45 |
| பாயின்ட் 80,157.88 | பாயின்ட் 24,579.60 |



**தங்கம்**
1 சவரன் ₹77,800
1 கிராம் ₹9,725



**வெள்ளி**
1 கிலோ ₹137,000
1 கிராம் ₹137.00

**டாலர்** ₹88.14

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# கச்சத்தீவை எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்கவே மாட்டோம்
## இலங்கை அதிபர் திட்டவட்டம்



**கொழும்பு, செப். 03-**

கச்சத்தீவை எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்கவே மாட்டோம் என்று இலங்கை அதிபர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன் பிடிப்பதாக கூறி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவது தொடர்கதையாக இருந்து வருகிறது. தமிழக மீனவர்களின் நலன் கருதி கச்சத்தீவு மீட்கப்பட வேண்டும் என பல்வேறு தமிழக அரசியல் கட்சிகள் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

கடந்த 21 ஆம் தேதி நடைபெற்ற தவெக மாநாட்டில் அக்கட்சியின் தலைவர் விஜய்யும் கச்சத்தீவை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பேசியிருந்தார். இந்த நிலையில், இலங்கை அதிபர் அனுர குமார, இரண்டு நாள் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு சென்றார். மயிலிட்டி துறைமுகத்தில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்த அவர், யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டினார்.

பின்னர் திடீரென நான்கு ரோந்துப் படகுகளுடன் கச்சத்தீவுக்கு சென்ற அவர், ஒரு மணி நேரத்துக்கும் மேலாக கச்சத்தீவை சுற்றிப் பார்த்தார். அப்போது இலங்கை அதிபர் பேசியதாவது: "கச்சத்தீவு எங்களுடைய பூமி. இந்த தீவு எமது மக்களுக்கு சொந்தமானது. எந்த ஒரு செல்வாக்கிற்கும், அதிகாரத்திற்கும் அடிபணிய மாட்டேன். மக்களுடைய உரிமைகளை பாதுகாக்க வேண்டியது எனது பொறுப்பு. அதை நான் நிறைவேற்றுவேன். எக்காரணம் கொண்டும் கச்சத்தீவை விட்டுக்கொடுக்க மாட்டோம்" என்றார்.

தொடர்ந்து கச்சத்தீவின் எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டார். அதன் பிறகு இலங்கை கடற்படையின் ரோந்துப் படகில் யாழ்ப்பாணம் திரும்பினார். இலங்கை அதிபர் ஒருவர் கச்சத்தீவுக்கு பயணம் சென்றது இதுவே முதல் முறை என கூறப்படுகிறது.

## ஆப்கானிஸ்தான் நிலநடுக்கம்:
# பலி 1,400 ஆக உயர்ந்தது

**காபூல், செப். 03-**

ஆப்கானிஸ்தானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதை தொடர்ந்து அங்கு 1,400 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் குனார் என்ற மாகாணம் உள்ளது. இது பாகிஸ்தானை ஒட்டிய பகுதியாகும். இது பெரும்பாலும் மலைகள் நிறைந்த இடமாகும்.இங்குள்ள வீடுகளில் பெரும்பாலானவை மண்ணால் கட்டப்பட்டவை . கடந்த 3 தினங்களுக்கு முன்பு இரவு 11.47 மணிக்கு குனார் மாகாணத்தில் பயங்கர நிலநடுக்கம் தாக்கியது. அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6 புள்ளிகளாக பதிவாகி இருந்தது.நங்கர்ஹார் மாகாணத்தின் ஜலாலாபாத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின. இரவில் அனைவரும் தூங்கிக்கொண்டு இருந்த நேரத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஆயிரக்கணக்கானவர்கள் கட்டிட இடிபாடுகளில் சிக்கினர். மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், பலி எண்ணிக்கை 1,400 ஐ தாண்டியுள்ளது. 3,214க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்து இருப்பதாகவும், 5,400 வீடுகள் இடிந்து சேதம் அடைந்துள்ளதாகவும் தாலிபான் நிர்வாகத்தின் செய்தி தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் கூறியுள்ளனர்.

## அமெரிக்க வரி விதிப்புக்கு எதிர்ப்பு:
# மத்திய அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆர்ப்பாட்டம்

**திருப்பூர், செப். 03-**

அமெரிக்க வரி விதிப்பை தொடர்ந்து மத்திய அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. இதனால் திருப்பூரில் பின்னலாடை நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கலக்கம் அடைந்துள்ளனர். இந்த வரி விதிப்பின் காரணமாக பனியன் தொழில் உள்ளிட்ட ஜவுளி தொழில்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

உற்பத்தி செய்யப்பட்ட ஆயத்த ஆடைகள் அந்தந்த நிறுவனங்களில் தேக்கமடைந்து கிடக்கின்றன. இதனால், ஜவுளி உற்பத்தி நிறுவனங்களில், உற்பத்தி குறைப்பு, தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஆகியவை ஏற்பட்டு உள்ளது. மேலும் வரி விதிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்பை தவிர்க்க, மத்திய அரசு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்த நிலையில், அமெரிக்க வரி விதிப்புக்கு நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளாத பாஜக அரசைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது. திருப்பூர் ரெயில் நிலையம் முன்பாக திமுக எம்.பி. ஆ. ராசா தலைமையில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுப்பராயன், சு.வெங்கடேசன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் சண்முகம், இந்திய கம்யூனிஸ்டு மாநில செயலாளர் முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர்மொய்தீன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், மக்கள் நீதி மய்யம் கட்சியின் பொதுச்செயலாளர் அருணாச்சலம், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் உள்ளிட்ட பலர் பங்கேற்றுள்ளனர்.

போராட்டத்தில் மத்திய அரசுக்கு எதிராக பதாகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் வருகின்றனர். அமெரிக்க வரி விதிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் மட்டும் தொழிலாளர்களின் குரலாய் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி இருக்கும் உடனடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளனர்.

## இலங்கை: செம்மணி புதைகுழியில்
# 209 மனித எலும்புக்கூடுகள் கண்டெடுப்பு

**கொழும்பு, செப். 03-**

இலங்கை செம்மணி புதைகுழியில் 209 மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் 30 ஆண்டுகளுக்கும் மேல் நடந்த உள்நாட்டு போரின்போது லட்சக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதுடன், ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயினர். பலர் காயமடைந்தனர். உள்நாட்டு போரின்போது 1998-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த வழக்கு ஒன்றில் தண்டனை பெற்ற ராணுவ வீரர் ஒருவரால் யாழ்ப்பாணம் மாவட்டம் செம்மணி என்ற இடம் மனித புதைகுழி என முதன்முதலாய் அம்பலப்படுத்தப்பட்டது.

அங்கு நடந்த அகழாய்வின்போது 15 எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் சில எலும்புக் கூடுகள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் இருந்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தொடர்ந்து, உள்நாட்டு போரின்போதும், போர் நிறைவடைந்த பிறகும் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மாத்தளை, சூரியகந்த, வனவாசல, கொழும்பு துறைமுகம் என 20-க்கும் மேற்பட்ட பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் இருந்தது கண்டறியப்பட்டது.

தற்போது உள்நாட்டு போர் உக்கிரமாக நடந்த யாழ்ப்பாணம் மாவட்டம், செம்மணி சிந்துப்பாத்தி என்ற பகுதியில் மற்றொரு இடத்தில் மனித புதைகுழியென சந்தேகிக்கப்படும் இடத்தில் கடந்த ஜூன் மாதம் அகழாய்வுப் பணி தொடங்கப்பட்டது. அப்போது சில எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. தொடர்ந்து நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஜூன் மாதத்திலிருந்து ஆக.31 வரை செம்மணி சிந்துபாத்தியில் மூன்று கட்ட அகழாய்வு நடந்தது. இதுவரை 209 எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிறுவர்களின் எலும்புக் கூடுகள் அதிகளவில் இருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் சிறுவர்களின் காலணிகள், விளையாட்டு பொருட்கள், புத்தகப் பைகள் போன்றவையும் கண்டெடுக்கப்பட்டுள்ளது சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

# நீலகிரி: வீட்டுத் தோட்டத்தில் கஞ்சா செடி வளர்த்த நபர்...!
## வனத்துறை சோதனையில் அதிர்ச்சி

**நீலகிரி, செப். 03-**

வீட்டுத் தோட்டத்தில் கஞ்சா செடி வளர்த்த நபர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகில் உள்ள கீழ் சேலதா பகுதியில் வசித்து வரும் நபர் ஒருவர் தனது வீட்டுத் தோட்டத்தில் வித்தியாசமான செடிகளை வளர்த்து வருவதாகவும், அவரின் நடவடிக்கைகளில் சந்தேகம் இருப்பதாகவும் அக்கம்பக்கத்தினர் வனத்துறையினருக்குத் தகவல் தெரித்திருக்கிறார்கள்.

சம்மந்தப்பட்ட நபரின் வீட்டிற்கு வனத்துறையினர் மற்றும் காவல்துறையினர் குழுவாகச் சென்று சோதனை செய்துள்ளனர். வீட்டின் பின்புறம் கஞ்சா செடிகளை வளர்த்து வந்ததைக் கண்டறிந்துள்ளனர். தொடர்ந்து அவரது வீட்டில் மேற்கொண்ட சோதனையில் காய வைத்த மான் இறைச்சி கத்தி போன்றவற்றையும் கண்டறிந்து பறிமுதல் செய்துள்ளனர். அவர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பின்னணி குறித்துத் தெரிவித்த வனத்துறையினர், "தேனாடுகம்பை காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வசித்து வரும் 64 வயதான கண்ணன் என்பவர் வீட்டுத் தோட்டத்தில் ரகசியமாக 12 கஞ்சா செடிகளை வளர்த்து வந்திருக்கிறார். அதோடு 300 கிராம் கஞ்சாவும் வைத்திருந்தார்.என தெரிவித்தனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# எடப்பாடியுடன் கருத்து வேறுபாடா?
# 5-ம் தேதி மனம் திறக்கிறேன்: செங்கோட்டையன் தகவல்

**சென்னை, செப். 03-**

செங்கோட்டையனுக்கும், எடப்பாடி பழனிசாமிக்கு இடையே கருத்து வேறுபாடுகள் வந்ததாக கூறப்படுவதை முன்னிட்டு வருகிற 5-ம் தேதி மனம் திறக்கிறேன் என்று முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவிததுள்ளார்.

முன்னாள் அமைச்சரும், அ.தி.மு.க. மூத்த தலைவருமான கே.ஏ.செங்கோட்டையன் எம்.எல்.ஏ.வுக்கும், பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும் இடையே கடந்த சில மாதங்களாக கருத்து வேறுபாடு இருந்து வந்தது. இந்த நிலையில் அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை நிறைவேற்றியதற்காக எடப்பாடி பழனிசாமிக்கு கடந்த பிப்ரவரி 9-ந் தேதி அன்னூரில் பாராட்டு விழா நடந்தது.

இதில் மேடை உள்ளிட்ட எங்கும் முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். படங்கள் இடம்பெறவில்லை எனக் கூறி முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் அந்த விழாவை புறக்கணித்தார். அதைத்தொடர்ந்து பா.ஜனதாவுடன் எந்த விதத்திலும் கூட்டணி இல்லை என்று எடப்பாடி பழனிசாமி பேசி வந்தார். ஆனால் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா தொடர்பாக நடைபெற்ற கூட்டங்களில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், கூட்டணியால் மட்டுமே வெற்றி பெற முடியும் என சூசகமாக மேடைகளில் தெரிவித்து வந்தார்.

இதற்காக கடந்த காலங்களில் அ.தி.மு.க.வுடன் வைக்கப்பட்ட கூட்டணிகள் குறித்து பேசினார். குறிப்பாக ஜெயலலிதா, ஜானகி அணி என இரு அணிகளாக பிரிந்து இருந்த காலகட்டங்கள் முதல் தற்போது வரை தெரிவித்தார். இதையடுத்து பா.ஜனதாவுடன் எடப்பாடி பழனிசாமி தேர்தல் கூட்டணி வைத்ததை தொடர்ந்து கே.ஏ.செங்கோட்டையன் மவுனமானார். அதன்பின்னர் கே.ஏ.செங்கோட்டையனுக்கு கட்சியில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் படிப்படியாக குறைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் எடப்பாடி பழனிசாமி கடந்த 2 மாதங்களுக்கு முன்பு மேட்டுப்பாளையத்தில் பிரசார பயணத்தை தொடங்கிய போது எடப்பாடியில் இருந்து கோபி வழியாகவே மேட்டுப்பாளையம் சென்றார். அப்போது கோபியில் உள்ள வீட்டில் இருந்த கே.ஏ.செங்கோட்டையன், கட்சியின் பொதுச்செயலாளர் என்ற முறையில் எடப்பாடி பழனிசாமிக்கு கோபி எல்லையில் வரவேற்பு கூட அளிக்கவில்லை. இப்படி தொடர்ந்து இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் அதிகரித்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், கோபி அருகே வெள்ளாங்கோவிலில் நேற்று முன்தினம் நடைபெற்ற திருமண விழாவில் கே.ஏ.செங்கோட்டையன் பங்கேற்றார். அப்போது அவர் கட்சி நிர்வாகிகளிடம், 5-ந் தேதி கோபியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடக்கும் கூட்டத்தில் மனம் திறந்து பேசுகிறேன் என்று கூறினார்.

அதனை தொடர்ந்து நேற்றும் தனது ஆதரவாளர்களுடன் செங்கோட்டையன் ஆலோசனை நடத்தி வருகிறார். முன்னதாக செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறுகையில், "5-ம் தேதி அன்று கோபிசெட்டிபாளையத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நான் மனம் திறந்து பேச போகிறேன். அப்போது என்ன கருத்துகளை சொல்லப்போகிறேன் என்பதை நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ளலாம். ஆகவே அது வரை நீங்கள் பொறுத்திருந்து எனக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன" என்று கூறினார்.

மேலும் அந்தக் கூட்டத்தில் கே.ஏ.செங்கோட்டையனின் நிலைப்பாடு குறித்தும், கட்சியில் தொடர்வதா? என்பது குறித்தும் அவரது ஆதரவாளர்களிடம் பேசி முடிவெடுக்க உள்ளதாக தெரிகிறது. இது அ.தி.மு.க. வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னையில் 2 நாட்களுக்கு இடி, மின்னலுடன் மழைக்கு வாய்ப்பு

**சென்னை, செப். 03-**

சென்னையில் 2 நாட்களுக்கு இடி மின்னலுடன் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.


தமிழகத்தில் வரும் 8-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வானிலை மையம் தெரிவித்துள்ளதாவது: வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது, அடுத்த 24 மணி நேரத்தில், மேலும் வலுவடைந்து, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, அதற்கடுத்த 24 மணி நேரத்தில் ஒரிசா பகுதிகளை கடந்து செல்லக்கூடும். மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக,

02-09-2025 மற்றும் 03-09-2025: வடதமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

04-09-2025 முதல் 08-09-2025 வரை: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னையை பொறுத்தவரை நேற்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 34-35° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக் கூடும்.

இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 34-35° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**03-09-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** உங்கள் புகழ் ஓங்கும். தெய்வ நம்பிக்கையும், பாக்கிய விருத்தியும் ஏற்படும். கோவில் திருப்பணிகள் செய்ய மனம் விழையும். வாழ்க்கையின் வசந்த காலம் என்று நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**ரிஷபம்:-** அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் அனுகூலம் பெறலாம். மனைவியின் கலகத்தால் உறவுகளிடையே உரசல்கள் ஏற்படலாம். பொருட்களை கவனமாக பாதுகாத்து இழப்பை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:-** சாதுர்யப் பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். பல வழிகளில் பணவரவு உண்டாகிப் பெரிய மனிதர் எனப் பெயர் எடுப்பீர்கள். அரசாங்கத்தால் ஆதாயங்கள் ஏற்படும்.

**கடகம்:-** திருப்திகரமான பணவரவுகள் மனமகிழ்ச்சி தரும். எதிர்பாராத வரவுகளும் ஏற்றம் தரும். புதிய ஆண், பெண் நண்பர்கள் அமைவர். அழகிய வீடு அமையும் வாய்ப்பு உருவாகும்.

**சிம்மம்:-** உங்கள் திறமைக்கேற்ற பாராட்டு கிடைக்காது. அக்கம் பக்கத்தினருடன் அனுசரணையாக நடப்பது நல்லது. வாகனங்களில் நிதானமாகச் சென்றால் தேவையற்ற விபத்துகளை தவிர்க்கலாம்.

**கன்னி:-** வீட்டில் திருட்டை தவிர்க்க எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். தாயின் உடல் நிலையில் மிகுந்த கவனம் தேவை. சிலருக்குப் பணமுடை மற்றும் பண இழப்புகள் ஏற்படும்.

**துலாம்:-** பழைய நிலுவைகள் கிடைப்பதால், புதிய உற்சாகம் பிறக்கும். குழந்தைகள் மீது அன்பும், அவர்களின் முன்னேற்றத்தில் ஆர்வம் ஏற்படும். மனைவியின் பணிவிடைகள் மகிழ்ச்சி அளிக்கும்.

**விருச்சிகம்:-** உங்கள் வழியில் தடைகள், சிக்கல்கள் ஏற்படலாம். மனைவியுடன் வாக்குவாதங்களை தவிர்க்கவும். வருமானக் குறைவு காரணமாக கடன் தொல்லைகள் மன அழுத்தத்தைத் தரும்.

**தனுசு:-** குடும்ப வாழ்க்கையில் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். படுக்கை சுகங்கள், நல்ல ஆடைகள், நண்பர்கள் அருகாமை, நல்ல அதிர்ஷ்டம் என எல்லா நலன்களும் தரும்.

**மகரம்:-** பெண்களால் கட்டுக்கடங்காத செலவுகள் ஏற்படும். வாகன விபத்தை தவிர்க்க வண்டியில் மெதுவாகச் செல்லவும். உறவுகளுடனான கருத்து வேறுபாடுகளை தவிர்க்க முயலவும்.

**கும்பம்:-** பிறருக்கு உதவி புரிவதால் பேரின்பம் அடைவார்கள். பிரிந்த தம்பதிகள் மீண்டும் ஒன்று சேர்ந்து மகிழ்வர். பணவரவு மற்றும் பெண்களால் லாபம் ஏற்பட மனம் மகிழும்.

**மீனம்:-** புதிய உத்தியோகமும், உத்வேகமும் ஏற்படும்.. பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு.

## மயிலாடுதுறையில் ருசிகரம்:
# 72 வயதில் டிப்ளமோ படிக்கும் முதியவர்

**கடலூர், செப். 03-**

கடலூர் மாவட்டத்தில் அரசின் பாலிடெக்னிக் கல்லூரியில் டிப்ளமோ படிக்கும் 72 வயது முதியவரை கண்டு கல்லூரி பேராசிரியர்கள் முதல் மாணவர்கள் வரை அனைவரும் இவரை ஆச்சரியத்துடன் பார்த்து வருகின்றனர். கடலூர் மாவட்டம் வடலூர் பகுதியை சேர்ந்தவர் செல்வமணி(வயது 72). இவருக்கு திருமணம் ஆகி இரண்டு மகள்கள் உள்ளனர். இரண்டு மகள்களுக்கும் திருமணம் முடிந்துவிட்டது. இதனால் இவர் தற்போது மனைவியுடன் வசித்து வருகிறார்.

ஐ.டி.ஐ. படித்த இவர் நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தில் பணிபுரிந்தார். அப்போது எம்.காம்., எம்.பி.ஏ., படிப்பை படித்து முடித்துள்ளார். பணி ஓய்வு பெற்று 10 வருடங்கள் முடிவடைந்த நிலையில் படிப்பின் மீது ஆர்வம் குறையாத செல்வமணி மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடத்தில் உள்ள அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் டிப்ளமோ எலெக்ட்ரிக்கல் என்ஜினீயரிங் 2ம் ஆண்டு படித்து வருகிறார்.

சக மாணவர்களைப் போல் தோளில் புத்தகப் பையை சுமந்து கொண்டு கையில் மதிய உணவை எடுத்துக்கொண்டு கல்லூரிக்கு உரிய நேரத்தில் வந்து செல்கிறார். உடல்நிலை சரியில்லாத தனது மனைவிக்கு தேவையான அனைத்தையும் செய்து வைத்து விட்டு காலை 9 மணிக்கு சரியாக கல்லூரிக்கு வரும் அவர் மாலை 5 மணி அளவில் கல்லூரி முடித்து விட்டு மீண்டும் தனது ஊரான வடலூர் பகுதிக்கு செல்கின்றார். இவருடன் பழகும் மற்ற மாணவர்கள் இவரை தாத்தா என்று அன்புடன் அழைக்கின்றனர்.

## வட மாநில தொழிலாளி உயிரிழப்பு:
# ரூ.5 லட்சம் இழப்பீடு அறிவிப்பு

**சென்னை, செப். 03-**

காட்டுப்பள்ளியில் வட மாநில தொழிலாளி பலியானதையொட்டி அரவது குடும்பத்திற்கு ரூ. 5 லட்சம் இழப்பீடு வழங்க ஒப்பந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் அடுத்த காட்டுப்பள்ளியில் இயங்கி வரும் எல்&டி கப்பல் கட்டும் நிறுவனத்தில் ஒப்பந்த தொழிலாளராக உத்தரப் பிரதேசத்தை சேர்ந்த அமர் பிரசாத் என்பவர் வேலைபார்த்து வந்துள்ளார். நேற்று முன்தினம் நள்ளிரவு அங்குள்ள வடமாநில தொழிலாளர்கள் தங்கும் குடியிருப்பில் வீட்டின் மாடியில் ஏறும் போது தவறி விழுந்து உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. சடலத்தை மீட்ட காட்டூர் காவல் துறையினர் உடற்கூறு ஆய்வுக்காக சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், வட மாநில தொழிலாளி உயிரிழந்தது குறித்து விசாரணை நடத்த வேண்டும் எனவும், அவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் எனக் கூறி 1,000க்கும் மேற்பட்ட வட மாநில தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.இதனைத் தொடர்ந்து, வடமாநில தொழிலாளிக்கு இழப்பீடு கேட்டு சகத் தொழிலாளர்கள் காவல் துறை மீது கல்வீச்சு தாக்குதலை நடத்திய நிலையில், காவல்துறையினர் கண்ணீர் புகை குண்டு வீசியும், தடியடி நடத்தியும் தொழிலாளர்களை விரட்டி அடித்தனர்.

அப்போது, துணை ஆணையர் உள்பட 10-க்கும் மேற்பட்ட போலீஸார் காயமடைந்தனர்.அப்பகுதியில் பாதுகாப்புக்காக 100-க்கும் மேற்பட்ட காவலர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். காட்டுப்பள்ளி சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். தொடர்ந்து, உயிரிழந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு ரூ. 5 லட்சம் இழப்பீடு வழங்குவதாகவும் உடலை சொந்த ஊர் கொண்டு செல்லும் செலவை ஏற்றுக்கொள்ளவதாகவும் ஒப்பந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

# சென்னையில் 10 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை

**சென்னை, செப். 03-**

சென்னையில் கே.கே.நகர், தியாகராய நகர், கீழ்ப்பாக்கம் உள்ளிட்ட 10 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். புரசைவாக்கத்திற்கு 2 வாகனங்களில் வந்த 8 அதிகாரிகள் தொழிலதிபர் அரவிந்த் என்பவருக்கு சொந்தமான வீடு மற்றும் அலுவலகங்களில் துப்பாக்கி ஏந்திய 2 காவலர்கள் பாதுகாப்புடன் சோதனை நடத்தினர்.

தியாகராயகநகரில் ஆடிட்டர் வீட்டில் அதிகாரிகள் சோதனை நடத்த சென்றனர். ஆடிட்டர் கடந்த ஆண்டு இறந்துவிட்டார் என்பது தெரியவந்ததால் சோதனை நடத்தாமல் அதிகாரிகள் திரும்பினர். சட்டவிரோத பண பரிவர்த்தனை தொடர்பாக அமலாக்கத்துறை சோதனை நடைபெறுவதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

### எனது தாயை அவமதித்துவிட்டனர்:
# எதிர்க்கட்சிகள் மீது பிரதமர் குற்றச்சாட்டு

**புதுடெல்லி, செப். 03-**

என் தாயை மட்டும் அவமதிக்கவில்லை, நாட்டின் தாய்மார்களை அவமதித்து விட்டனர் என்று பிரதமர் மோடி வேதனையுடன் கூறியுள்ளார்.

பீகாரில் நடைபெற்ற பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் டெல்லியில் இருந்து காணொலி வாயிலாக பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று பேசியதாவது:- ராஷ்ட்ரிய ஜனதா தளம் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தின்போது, எனது தாயை எதிர்க்கட்சிகள் அவமதித்து விட்டனர். 'இந்தியத் தாயை' அவமதிப்பவர்களுக்கு என் அம்மாவை திட்டுவது ஒரு பொருட்டே அல்ல, அத்தகையவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். என் தாயை இழிவாகப் பேசிய போது, என் இதயம் எவ்வளவு காயமடைந்ததோ, அதைவிட பீகாரில் உள்ள பெண்கள், அதைக் கேட்டு எந்த அளவுக்கு வலியை சுமந்திருப்பார்கள் என்று எனக்குத் தெரியும்.

ராஷ்ட்ரிய ஜனதா தளத்தையும் காங்கிரஸ் கட்சியையும் நான் மன்னித்துவிடுவேன், ஆனால், எனது தாயை இழிவாகப் பேசியவர்களை பீகார் மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். பீகாரில் ராஷ்ட்ரிய ஜனதா தள ஆட்சி, பெண்களால்தான் கவிழ்க்கப்பட்டது என்பதால், அக்கட்சி பெண்களை பழிவாங்கிறது. எனது தாயை இழிவாகப் பேசியவர்களின் மனநிலையே, பெண்கள் பலவீனமானவர்கள் என்பது தான்.

அரசியலுக்கும் எனது தாய்க்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அப்படியிருக்கும் போது, ராஷ்ஷ்ட்ரிய ஜனதா தளம் காங்கிரஸ் நடத்திய வாக்காளர் அதிகார யாத்திரையில், எனது தாயைப் பற்றி பேச வேண்டியதன் அவசியம் என்ன? பழங்குடி குடும்பத்தைச் சேர்ந்த ஜனாதிபதி திரௌபதி முர்முவை காங்கிரஸ் எப்போதும் அவமதிக்கிறது பெண்கள் மீதான இந்த வெறுப்பு அரசியலை நிறுத்துவது மிகவும் முக்கியம். ராஷ்ட்ரிய ஜனதா தளம் மற்றும் காங்கிரஸ் செய்யும் அட்டூழியங்களை நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

### ஜனாதிபதி திரௌபதி முர்மு வருகை:
# திருச்சியில் 2 நாட்கள் டிரோன்கள் பறக்க தடை

**திருச்சி, செப். 03-**

ஜனாதிபதி திருச்சி வருவதை முன்னிட்டு 2 நாட்கள் டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி திரௌபதி முர்மு 2 நாள் பயணமாக நேற்று தமிழகம் வந்துள்ளார். சென்னை வந்துள்ள அவர், நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெறும் சிட்டி யூனியன் வங்கியின் 120-வது ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்றுள்ளார். இதையடுத்து இரவு சென்னையில் தங்கும் ஜனாதிபதி முர்மு இன்று காலை விமானம் மூலம் திருச்சி செல்கிறார்.

திருச்சியில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் திருவாரூர் மாவட்டம் நீலக்குடியில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக் கழகம் செல்கிறார். அங்கு நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்க உள்ளார்.

பின்னர் ஹெலிகாப்டர் மூலம் திருச்சி சென்று, ஸ்ரீரங்கம் கோவிலில் சாமி தரிசனம் செய்ய உள்ளார். இதைத்தொடர்ந்து திரௌபதி முர்மு, இன்று மாலை திருச்சியில் இருந்து தனி விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு செல்கிறார்.

இந்நிலையில், ஜனாதிபதி வருகையையொட்டி திருச்சியில் நேற்றும், இன்றும் (2 நாட்கள்) டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதேவேளை, ஜனாதிபதி வருகையையொட்டி திருச்சியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# சசிகாந்த் செந்தில் எம்.பி.யை நேரில் சந்தித்து நலம் விசாரித்த கனிமொழி



**திருவள்ளூர், செப். 03-**

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சசிகாந்த் செந்தில் எம்.பி.யை கனிமொழி நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

தமிழகத்திற்கான கல்வி நிதி ரூ. 2 ஆயிரத்து 152 கோடியை மத்திய அரசு வழங்காததை கண்டித்து திருவள்ளூர் தொகுதி காங்கிரஸ் எம்.பி. சசிகாந்த் செந்தில் கடந்த 29ம் தேதி முதல் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கியுள்ளார். திருவள்ளூர் கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள எம்.பி. அலுவலகத்தில் உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினார். உண்ணாவிரதத்தின் போதுபோது சசிகாந்த் செந்திலுக்கு கடந்த 3 தினங்களுக்கு முன்பு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து, திருவள்ளூரில் உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் மேல்சிகிச்சைக்காக சசிகாந்த் செந்தில் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ள நிலையிலும் தொடர்ந்து 4வது நாளாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சசிகாந்த் செந்தில் எம்.பி.யை திமுக எம்.பி. கனிமொழி நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

### செங்கோட்டையன் விவகாரம்:
# எடப்பாடி பழனிசாமி பதில்

**மதுரை, செப். 03-**

செங்கோட்டையன் விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமி பதில் அளித்துள்ளார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும் இடையே கடந்த சில மாதங்களாகவே கருத்து மோதல் நிலவி வருகிறது. கடந்த பிப்ரவரி மாதம் அத்திக்கடவு - அவிநாசி திட்டம் நிறைவேற்றியதற்காக எடப்பாடி பழனிசாமிக்கு பாராட்டு விழா நடைபெற்றது. அன்னூரில் நடந்த அந்த பாராட்டு விழாவில், மேடையில் மறைந்த முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவின் புகைப்படங்கள் இல்லை என்று எதிர்ப்புக் குரல் எழுப்பினார் செங்கோட்டையன்.

அதன்பிறகு தொடர்ந்து தனது பேட்டிகளில் எடப்பாடி பழனிசாமி பெயரைக் கூறுவதை தவிர்த்து வந்தார். கடந்த சில வாரங்களுக்கு முன்பாக 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' பிரச்சாரப் பேரணியை எடப்பாடி பழனிசாமி மேட்டுப்பாளையத்தில் இருந்து தொடங்கினார். அவர் இதற்காக கோபி வழியாகவே மேட்டுப்பாளையம் சென்றார். ஆனால், கோபிச் செட்டிபாளையத்தில் எடப்பாடி பழனிசாமிக்கு செங்கோட்டையன் வரவேற்பு அளிக்கவில்லை. எடப்பாடி பழனிசாமியை செங்கோட்டையன் தொடர்ந்து புறக்கணித்து வந்தது அரசியல் வட்டாரத்தில் பல்வேறு யூகங்களுக்கு வித்திட்டது.

இந்நிலையில் நேற்று காலை செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன், "ஈரோடு மாவட்டம் கோபியில் கட்சி அலுவலகத்தில் வருகிற 5ம் தேதி காலை 9 மணி அளவில் செய்தியாளர்களை சந்திக்கிறேன். மனம் திறந்து பேச உள்ளேன். அதுவரை செய்தியாளர்கள் பொறுமை காக்க வேண்டும். என்றார்.

அ.தி.மு.க.வில் மிக மூத்த தலைவர்களில் ஒருவரான செங்கோட்டையன் அன்றைய தினம் என்ன பேசப் போகிறார்? சசிகலா - ஓ. பன்னீர்செல்வம் உள்ளிட்டோரை கட்சியில் இணைக்க வலியுறுத்தப் போகிறாரா? அல்லது அ.தி.மு.க.வில் இருந்து விலக திட்டமிட்டுள்ளாரா? என்றெல்லாம் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பான பேச்சு எழுந்துள்ளது.

இந்த நிலையில், செங்கோட்டையனின் கருத்து தொடர்பாக எடப்பாடி பழனிசாமியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த எடப்பாடி பழனிசாமி, "செங்கோட்டையன் விவகாரம் குறித்து நேற்று மாலை பிரச்சாரத்தில் பதில் அளிக்கிறேன்" என்று மட்டும் கூறிவிட்டு சென்றார்.

### தங்கம் கடத்தல் வழக்கு:
# நடிகை ரன்யா ராவுக்கு ரூ.102 கோடி அபராதம்




**கர்நாடகா, செப். 03-**

தங்கம் கடத்தல் வழக்கில் நடிகை ரன்யா ராவ் மீது காபிபோசா சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் சிக்மகளூரை சேர்ந்தவர் நடிகை ரன்யா ராவ் (வயது 32). கர்நாடக போலீஸ் டி.ஜி.பி. ராமச்சந்திர ராவின் வளர்ப்பு மகளான இவர் கன்னடம், தமிழ், தெலுங்கு உள்ளிட்ட திரைப் படங்களில் நடித்துள்ளார். தமிழில் விக்ரம் பிரபு நடித்த 'வாகா' படத்தில் நடித்துள்ளார். கடந்த மார்ச் மாதம் 3-ந் தேதி துபாயில் இருந்து விமானம் மூலம் பெங்களூர் சர்வதேச விமான நிலையத்தில் தங்கம் கடத்தியது தெரியவந்தது. இதையடுத்து அவரிடம் அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தினார்கள். அப்போது 10-க்கும் மேற்பட்ட முறை துபாய் சென்று வந்த அவர், அங்கிருந்து வரும்போதெல்லாம் பெல்ட், பை, உடைகளில் தங்கம் கடத்தி வந்ததாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து அவரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

நடிகை ரன்யா ராவ் தனக்கு ஜாமீன் வழங்க கோரி பலமுறை கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். வருவாய் புலனாய்வு இயக்குனரகம் குறிப்பிட்ட காலகட்டத்தில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய தவறியதால், ரன்யாராவ் மற்றும் தருணுக்கு நிபந்தனையுடன் பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் சமீபத்தில் ஜாமீன் வழங்கியது. ஆனால், அன்னிய செலாவணி மற்றும் கடத்தல் மீறல்கள் தொடர்பான காபிபோசா சட்டம் நடிகை ரன்யா ராவ் மீது பாய்ந்துள்ளது. இதனால் அவர் ஓராண்டு சிறையிலேயே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில் , நடிகை ரன்யா ராவ் மீது சட்டவிரோத தங்கக் கடத்தல் வழக்கில் மிகப்பெரிய அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் வருவாய் புலனாய்வு இயக்ககம் நடத்திய விசாரணையில், ரன்யா ராவ் 127.3 கிலோ தங்கத்தை சட்டவிரோதமாக இந்தியாவுக்கு கொண்டு வந்தது உறுதியாகியுள்ளது. இதனையடுத்து, ரூ.102.55 கோடி அபராதம் விதித்து, அதற்கான நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. மற்ற மூவருக்கும் தலா ரூ.50 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலத்திற்குள் அபராதம் செலுத்தாவிட்டால், ரன்யா ராவுக்கு சொந்தமான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### பி.ஆர்.எஸ். கட்சியில் இருந்து
# சந்திரசேகர ராவின் மகள் கவிதா திடீர் சஸ்பெண்ட்

**ஐதராபாத், செப். 03-**

கவிதாவை பிஆர்எஸ் கட்சியில் இருந்து சஸ்பெண்ட் செய்து அவரது தந்தையும் கட்சி தலைவருமான சந்திரசேகர ராவ் உத்தரவிட்டுள்ளார்.

பாரதிய ராஷ்ட்ரிய சமிதி கட்சியிலிருந்து சந்திரசேகர ராவின் மகள் கவிதா இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். சந்திரசேகரராவின் மகன் கே.டி. ராமராவ், மகள் கவிதா இடையே மோதல் நீடித்த நிலையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பி.ஆர்.எஸ்.-ஐ அழிக்கும் வகையில் சிலர் செயல்படுவதாக தமது அண்ணன் மீது கவிதா அண்மையில் குற்றம் சாட்டியிருந்தார்.



இத்தகைய சூழலில்தான் கவிதா கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். கட்சியின் கட்டுப்பாட்டை மீறி களங்கம் விளைவிக்கும் வகையில் பேசியதாக குற்றம் சாட்டி பி.ஆர்.எஸ். கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை குழு இந்த இடைநீக்கத்தை செய்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

காலேஸ்வரம் நீர்ப்பாசன திட்டத்தில் நடைபெற்ற முறைகேடு தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி உத்தரவிட்டுள்ளார். இந்த முறைகேட்டில் தனது தந்தை சந்திரசேகரராவுக்கு எந்த தொடர்பும் இல்லை என்றும் சந்தோஷ் ராவ் மற்றும் ஹரிஷ் ராவுமே இதற்கு காரணம் என்று கவிதா பேசியிருந்தார். இதற்கு மறுநாளே அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கோவை கலெக்டர் அலுவலகத்திற்கு இ-மெயிலில் வெடிகுண்டு மிரட்டல்

**கோவை, செப். 03-**

கோவை கலெக்டர் அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிட்டல் விடுக்கப்பட்டதை தொடர்ந்து அங்கு வெடிகுண்டு நிபுணர்கள் சோதனை நடத்தினர்.

கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு இ-மெயில் மூலம் அடிக்கடி மிரட்டல் விடுக்கப்படுகிறது. கடந்த மாதம் 26 மற்றும் 27-ந் தேதிகளில் இ-மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்தது. இதைத்தொடர்ந்து வெடிகுண்டு நிபுணர்கள் வந்து சோதனை நடத்தினார்கள். இதில், சந்தேகப்படும்படியாக எந்த பொருளும் சிக்கவில்லை. எனவே, வெடிகுண்டு மிரட்டல் புரளி என்று கண்டறியப்பட்டது.

இந்த நிலையில் நேற்று காலை கோவை கலெக்டர் அலுவலகத்திற்கு அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வழக்கம் போல பணியில் ஈடுபட்டிருந்தபோது மீண்டும் இ-மெயில் மூலமாக வெடிகுண்டு மிரட்டல் வந்திருந்தது. இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த ஊழியர்கள் இது குறித்து அதிகாரிகளுக்கும், ரேஸ்கோர்ஸ் போலீசாருக்கும் தகவல் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து கலெக்டர் அலுவலகத்திற்கு வெடிகுண்டுகளை கண்டுபிடிக்கும் மெட்டல் டிடெக்டர் கருவிகள் மற்றும் மோப்பநாய் உடன் அதிகாரிகள் விரைந்து வந்து சோதனை நடத்தினார்கள். அவர்கள் கலெக்டர் அலுவலக வளாகம் முழுவதும் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கட்டிடங்களிலும் ஒவ்வொரு அறையாக சோதனை மேற்கொண்டனர்.

சோதனையில், இ-மெயில் மிரட்டல் கடிதத்தில் கூறப்பட்டது போல வெடிகுண்டுகள் எதுவும் சிக்கவில்லை. எனவே இதுவும் புரளி என்பது தெரியவந்தது. இதனால் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று காலை சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து இ-மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் கடிதம் அனுப்பிய நபர் யார்? என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கனமழை காரணமாக
# டெல்லி-ஜெய்ப்பூர் நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல்: மக்கள் அவதி

**புதுடெல்லி, செப். 03-**

டெல்லி - ஜெய்ப்பூர் நெடுஞ்சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

குருகிராமில் பெய்த கனமழையால், இரவு நேரத்தில் டெல்லி-ஜெய்ப்பூர் நெடுஞ்சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சுமார் 20கி.மீ. தூரத்திற்கு போக்குவரத்து நெரிசலில் சிக்கித் மக்கள் தவித்தனர். வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்புவோர், அவசர வேலைகள், சுப நிகழ்ச்சிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு செல்பவர்கள் என பல தரப்பட்ட மக்களும் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டு கடும் அவதிக்கு ஆளாகினர். ஹாரன் ஒலிகள் சாலை முழுவதும் ஒலித்துக் கொண்டே இருந்தன. திருவிழாக்காலங்களில் போடப்படும் ஒளி விளக்குகளை போன்று, சாலைகள் வாகனங்களில் விளக்குகளால் நிறைந்து காணப்பட்டன. இரண்டு மணி நேரம் பெய்த மழையை கூட நகரம் தாங்காது என்றால், எங்களின் வரிப்பணம் எல்லாம் எங்கே செலவிடப்படுகிறது? என குருகிராம் மக்கள் இணையத்தில் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

வெள்ள பாதிப்பு தொடர்பான வீடியோவை பகிர்ந்து, பாஜகவின் மில்லினியம் நகர நகர்ப்புற மேம்பாட்டின் மூன்று இன்ஜின் மாதிரியை காங்கிரஸ் தலைவர் ரன்தீப் சுர்ஜ்வாலா கடுமையாக விமர்சித்துள்ளார். மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் அதிகாரத்தில் இருந்தும் கூட, குருகிராம் மக்களுக்கான சேவையை பாஜகவால் செய்ய முடியவில்லை என விமர்சித்துள்ளார்.

பஞ்சாப், டெல்லி உள்ளிட்ட மாநிலங்களில் நேற்று அதிக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அலுவலகங்கள் தங்கள் ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்யச் சொல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. பள்ளிகளும் ஆன்லைன் வகுப்புகளை நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

### வட மாநில தொழிலாளர்கள் போராட்டத்தில்
# போலீசார் மீது திடீர் கல்வீச்சு: 50-க்கும் அதிகமானோர் கைது

**பொன்னேரி, செப். 03-**

மீஞ்சூர் அருகே காட்டுப்பள்ளியில் வட மாநில தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தில் சமரசம் பேசவந்த போலீசார் மீது கல்வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. பதிலுக்கு போலீசார் தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டு வீசியும் கூட்டத்தைக் கலைத்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே உள்ள காட்டுப்பள்ளியில் தனியார் நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் ஒப்பந்த தொழிலாளராக உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த அமர்பிரசாத் பணிபுரிந்து வந்தார். இந்நிலையில், அமர்பிரசாத் நேற்றிரவு காட்டுப்பள்ளியில் உள்ள வட மாநில தொழிலாளர்கள் தங்கும் குடியிருப்பு பகுதியில், வீட்டின் மாடியில் ஏறும்போது தவறி விழுந்து உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து, தகவலறிந்த காட்டூர் போலீஸார், சம்பவ இடத்திற்கு விரைந்து, அமர்பிரசாத்தின் உடலை மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில், உயிரிழந்த அமர்பிரசாத்தின் உடலை தங்களிடம் காண்பிக்க வேண்டும், அவரின் உயிரிழப்பு தொடர்பாக உரிய விசாரணை நடத்த வேண்டும், அமர்பிரசாத்தின் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வட மாநில தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், காட்டுப்பள்ளி பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டது. இதனிடையே, பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்களிடம் போலீஸார் மற்றும் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்த முயன்றனர். ஆனால், போராட்டக்காரர்கள் சிலர் போலீஸார் மீது கல்வீசி தாக்குதலில் ஈடுபட்டனர். தொடர்ந்து போலீஸார் கூட்டத்தை தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டு வீசியும் கலைத்தனர். இதனால் அப்பகுதியே சிறிது நேரம் கலவர பூமி போல் இருந்தது. இந்நிலையில், அங்கு தொடர்ந்து போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

### மத்திய பிரதேசத்தில் அதிர்ச்சி:
# அரசு மருத்துவமனையில் பிறந்த இரண்டு குழந்தைகளை எலிகள் கடித்ததில் காயம்

**இந்தூர், செப். 03-**

மத்திய பிரதேசத்தில் அரசு மருத்துவமனையில் பிறந்த 2 குழந்தைகளை எலிகள் கடித்ததில் காயம் ஏற்பட்ட சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய பிரதேசத்தின் இந்தூர் நகரில் மகராஜா யஷ்வந்த்ராவ் என்ற அரசு மருத்துவமனை உள்ளது. மாநிலத்தில் மிக பெரிய மருத்துவமனைகளில் ஒன்றான இதில், சிகிச்சைக்காக 2 குழந்தைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. அவற்றை எலிகள் கடித்து விட்டன என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுபற்றி அந்த மருத்துவமனையின் சூப்பிரெண்டான டாக்டர் அசோக் யாதவ் கூறும்போது, கடந்த 48 மணிநேரத்தில், தீவிர சிகிச்சை பிரிவில் உள்ள குழந்தை ஒன்றின் விரல்களையும், மற்றொரு குழந்தையின் தலை மற்றும் தோள் பகுதியையும் எலிகள் கடித்து உள்ளன என்றார். அவை இரண்டும் புதிதாக பிறந்த குழந்தைகள் ஆகும். அவற்றில் ஒரு குழந்தை கார்கோன் மாவட்டத்தில் யாருமற்ற நிலையில் கைவிடப்பட்டு கிடந்துள்ளது. அதனை மீட்டு சிகிச்சைக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்றார்.

இந்த சம்பவங்கள் பற்றி விசாரிக்க கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. 24 மணிநேரமும் தீவிர கண்காணிப்புடன் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது என அவர் கூறியுள்ளார். மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க. ஆட்சி செய்து வரும் நிலையில், இந்த சம்பவம் பற்றி நீதிமன்ற விசாரணை வேண்டும் என எதிர்க்கட்சியான காங்கிரஸ் வலியுறுத்தி உள்ளது.

# சென்னையில் தூய்மை பணியாளர்கள் போராட்டம் நடத்த காவல்துறை அனுமதி

**சென்னை, செப். 03-**

சென்னையில் தூய்மை பணியாளர்கள் போராட்டம் நடத்த காவல்துறை அனுமதி அளித்துள்ளது.

சென்னை மாநகராட்சி, ராயபுரம், திரு.வி.க. நகர் மண்டலங்களில் தனியார் நிறுவனத்தின் வாயிலாக ஜூலை 16ம் தேதி முதல் திடக்கழிவு மேலாண்மை மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும், கடந்த மாதம் 1ம் தேதி வேலை நிறுத்த போராட்டத்தை தொடங்கினர்.

இதற்கிடையில், தூய்மை பணியாளர்கள் போராட்டம் காரணமாக பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக கூறி தேன்மொழி என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட், தூய்மை பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டது. இதையடுத்து தூய்மை பணியாளர்களை போலீசார் அங்கிருந்து வலுக்கட்டாயமாக கைது செய்து கடந்த மாதம் 13-ம் தேதி வெளியேற்றினர். இந்த நிலையில், போராட்டம் நடத்த தூய்மை பணியாளர்கள் போலீசாரிடம் அனுமதி கேட்டிருந்த நிலையில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே போராட்டம் நடத்த போலீசார் அனுமதி அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தி.மு.க. அரசு உண்மையாகவே தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால், அவற்றின் வரிசை எண் வாரியாக எந்தெந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன? அவற்றுக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது? அதனால் எவ்வளவு பேர் பயனடைந்துள்ளனர்? என்ற விவரங்களை வெளியிட வேண்டும்.

- அன்புமணி



இலங்கை அதிபரின் கச்சத்தீவுப் பயணம், கச்சத்தீவு மற்றும், தமிழக மீனவர்கள் குறித்த அவரது அணுகுமுறை தமிழக மீனவர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பையும், பதற்றத்தையும் உருவாக்கியுள்ளது என்பதை மத்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகம் கருத்தில் கொண்டு, இந்த விவகாரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- முத்தரசன்



கடந்த 2024-ம் ஆண்டு ஒரே ஒரு முறை வெளிநாட்டிற்கு பயணம் செய்து, மராட்டிய முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் ரூ.15 லட்சம் கோடி முதலீட்டை தனது மாநிலத்திற்கு கொண்டு வந்தார். அதிலும், தமிழகம் போன்ற ஒரு அதிகப்படியான ஜி.டி.பி. கொண்ட மாநிலத்திற்கு, ரூ.3,200 கோடி முதலீடெல்லாம் யானை பசிக்கு சோளப்பொரியே.

- நயினார் நாகேந்திரன்



தமிழ்நாட்டிலும் பா.ஜ.க. வாக்குத்திருட்டில் ஈடுபடலாம். தேர்தல் கமிஷன் முழுமையாக பாரதிய ஜனதாவின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. கடைசிவரை பாராளுமன்றத்தில் பீகாரின் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் பற்றி அவர்கள் விவாதிக்கவில்லை. அதேபோல 30 நாட்கள் சிறையில் இருந்தால் பதவியை பறிக்கும் சட்டத்திருத்தம் பாசிசத்தின் உச்சம்.

- திருமாவளவன்

# ஈரோடு சூர்யா என்ஜினியரிங் கல்லூரி 18வது ஆண்டு தொடக்க விழா: அமைச்சர் கோவி.செழியன் பங்கேற்பு



ஈரோடு,செப்.3-

ஈரோடு மேட்டுக்கடை அருகே கதிரம்பட்டியில் உள்ள சூர்யா என்ஜினியர் கல்லூரியில் 18 ஆம் ஆண்டு தொடக்க விழா மற்றும் முதலாம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கான வரவேற்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு கல்லூரி தலைவர் ஆண்டவர் ராமசாமி தலைமை தாங்கினார். செயலாளர் கலைச்செல்வன் முன்னிலை வகித்தார். உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி விழாவை தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் மாணவ மாணவிகள் மத்தியில் பேசினார்.அப்போது அவர் கூறியதாவது தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு முக்கிய காரணம் பெரியார் அவர் அனைவரையும் படிக்க வேண்டும் என்று கூறினார் .

நம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உயர் கல்வி படிப்பவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருகிறார். இதனால் நம் மாநிலம் உயர் கல்வியில் இந்தியாவில் முதல் இடத்தில் உள்ளது. கடந்த 6 மாதத்தில் 16 அரசு கல்லூரியில் திறக்கப்பட்டுள்ளன.

கல்வி கற்க வறுமை ஒரு தடையல்ல. தமிழ் புதல்வன், புதுமைப்பெண் ,நான் முதல்வன் போன்ற திட்டங்கள் மாணவ மாணவிகள் படிக்க நன்றாக உதவுகின்றன என்றார்.

நிகழ்ச்சியில் எம்.எல்.ஏக்கள்.வி.சி. சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாஜலம் , பொருளாளர் கேசவன், துணைத்தலைவர் இளங்கோ, இணைச் செயலாளர் சஞ்சீவ் குமார் உள்பட இயக்குனர்கள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக கல்லூரி முதல்வர் மனோகரன் வரவேற்றார். முடிவில் ஒருங்கிணைப்பாளர் சியாமளா நன்றி கூறினார்.

# உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இளம் நுகர்வோர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி

## நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்தார்



ஊட்டி,செப்.03-

நீலகிரி மாவட்டம் பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இளம் நுகர்வோர்களுக்கு, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019ன் கீழ் 2025-2026 ஆம் ஆண்டிற்கான புத்தாக்கப் பயிற்சியினை, கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

நீலகிரி மாவட்ட நிர்வாகம் மற்;றும் மாவட்ட வழங்கல் அலகின் சார்பில், மாவட்ட அளவில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 குறித்து ஒரு நாள் புத்தாக்கப்பயிற்சி வழங்குவதை நோக்கமாக கொண்டு, இன்று நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற 2025-2026 புத்தாக்க பயிற்சியில் உதகை தொகுதி நுகர்வோர் பாதுகாப்பு சங்கம், கோத்தகிரி புளுமவுண்டன் மற்றும் கோத்தகிரி நுகர்வோர் பாதுகாப்பு சங்கம், குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்கம், கூடலூர் நுகர்வோர் மனித வள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் மற்றும் 45 பள்ளிகளை சார்ந்த 180 மாணவ, மாணவிகளும், உதகை அரசு கலை கல்லூரியை சார்ந்த 60 மாணவ, மாணவிகள் இந்த புத்தாக்க பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இன்று நடைபெற்ற புத்தாக்க பயிற்சியில் சிறப்பு விருந்தினராக மாவட்ட நுகர்வோர் குறைதீர்; ஆணையத்தின் உறுப்பினர் உதகை ஆர். எம்.சசிராஜா ; கலந்து கொண்டு, பள்ளி அளவில் குடிமக்கள் நுகர்வோhர் மன்றத்தில் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019 தொடர்பான உரையாற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அதனை தொடர்ந்து, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் இளம் நுகர்வோர்களுக்கு, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019 குறித்து நடைபெற்ற புத்தாக்க பயிற்சியில், பள்ளியளவில் நடைபெற்ற ஓவிய போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதை போட்டி ஆகிய போட்டிகளில், வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) நந்தகுமார், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட நியமன அலுவலர் (உணவு பாதுகாப்பு) மரு.அனுராதா, தமிழ்நாடு நுகர்வோர் வாணிப கழகம் மண்டல மேலாளர் கௌரிமணவாளன், தனி வட்டாட்சியர் மோகனா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சி நான்காம் மண்டலத்திற்கு உட்பட்ட 60-வது வார்டு மக்களுக்காக 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற சிறப்புத் திட்ட முகாம் நடைபெற்றது. இந்த முகாமில், கே.இ.பிரகாஷ் எம்.பி. பயனாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்வில், நான்காம் மண்டல தலைவர் குறிஞ்சி என்.தண்டபாணி, 60-வது வார்டு உறுப்பினர் தண்டபாணி, நான்காம் மண்டல உதவி ஆணையாளர் லதா உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில்

# கல்வி கடன் முகாமில் 4 பேருக்கு ரூ.23.42 லட்சம் மதிப்பில் கடனுதவிகள் பெறுவதற்கான வங்கியின் ஒப்புதல் கடிதம்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்



ஊட்டி,செப்.03-

நீலகிரி கலெக்டர் கூடுதல் அலுவலகத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்தும் மாபெரும் கல்வி கடன் முகாமினை, கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தொடங்கி வைத்து, கடனுதவிகள் பெறுவதற்கான ஒப்புதல் கடிதத்தினை வழங்கினார்.

பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது:

பள்ளி படிப்பு முடித்து அனைவரும் உயர்கல்வி செல்ல வேண்டும் என்பதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், உயர்கல்விக்கு செல்லும் போது மாணவ, மாணவியர்களுக்கு கல்வி கடனுதவிகள் கிடைப்பதற்காக, பல்வேறு வங்கிகளை தொடர்பு கொண்டு மாணவ, மாணவியர்களிடையே கடனுதவிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக, இணையதளம் வாயிலாக ஆவணங்களுடன் எவ்வாறு பதிவு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் மாணவ, மாணவிகள் இக்கூட்டத்திலேயே கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

அதேபோல் போல் மாணவ தன்னார்வலர்கள் தங்களது கல்லூரிகளில் பயிலும் பிற மாணவர்களிடமும் கல்வி கடனுதவி தொடர்பாக எடுத்துரைத்து அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அதேபோல், வங்கியாளர்கள் மாணவ, மாணவியர்கள் வழங்கும் கல்வி கடனுதவிக்கான விண்ணப்ப படிவங்களை கனிவுடன் பரிசீலனை செய்து தகுதியான எவரும் விடுபடாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று வங்கியாளர்கள் வழங்கப்பட்ட பல்வேறு அறிவுரைகள் குறித்து ஏற்கனவே உருவாக்கப்பட்ட வாட்ஸ் அப் குரூப்பிலும் பகிர வேண்டும். வருங்காலத்தில் நமது மாவட்டத்தில் கல்லூரிகளின் அருகிலேயே அனைத்து மாணவ, மாணவிகளும் பயன்பெறும் வகையில் அனைத்து வங்கிகளும் கலந்து கொள்ளும் வகையில், வங்கி கடனுதவி மேளா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே, நமது மாவட்டத்தில் இதுபோன்று நடைபெறும் முகாம்களை மாணவ, மாணவியர்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என கலெக்டர் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து கலெக்டர் 4 மாணவ, மாணவியர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களிடம் ரூ.23.42 இலட்சம் மதிப்பில் கல்வி கடனுதவி பெறுவதற்கான வங்கி ஒப்புதல் கடிதத்தினை வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சதானந்தகல்கி, பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) திலகவதி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) நந்தகுமார், பாரத ஸ்டேட் வங்கி முதன்மை மேலாளர் ரமேஷ் பாபு, கனரா வங்கி முதன்மை மேலாளர் கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கதிரம்பட்டி, நசியனூர் பேரூராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள்

## கலெக்டர் ச.கந்தசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு



ஈரோடு.செப்.03-

ஈரோடு ஊராட்சி ஒன்றியம், கதிரம்பட்டி, நசியனூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை கலெக்டர் ச.கந்தசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு கலெக்டர் ஈரோடு ஊராட்சி ஒன்றியம், கதிரம்பட்டி ஊராட்சியில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில், தேசிய தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்தின் கீழ் விவசாயி செல்வ முத்துகுமார் என்பவர் தேனி வளர்ப்பு பயிற்சி பெற்று ரூ.24,000/- அரசு மானியத்துடன் அமைக்கப்பட்டுள்ள தேனி வளர்ப்பு பண்ணையினை பார்வையிட்டு விவசாயிடம் தேனி வளர்ப்பு முறை, தேன் உற்பத்தி காலம், உற்பத்தி செய்யப்படும் தேன் விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதல், நிகர லாபம் மற்றும் கரும்பு சாகுபடி செய்யும் முறை ஆகியவற்றை குறித்தும் கலந்துரையாடினார்.

விவசாயி வருடத்திற்கு 8 முறை தேன் உற்பத்தி செய்யப்படுவதாகவும், ஒவ்வொரு முறையும் ஒரு பெட்டிக்கு ஒரு கிலோ தேன் வீதம் உற்பத்தி செய்யப்பட்டு கிலோ ரூ.800/-க்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அதே பகுதியில், வேளாண்மைத்துறையின் சார்பில் சொட்டு நீர் பாசனத் திட்டத்தின் கீழ் விவசாமி பழனிச்சாமி என்பவர் ரூ.90,732/- அரசு மானியத்துடன் 0.87 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டு நீர் பாசனம் அமைத்து கரும்பு விவசாயம் செய்து வருவதையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, விவசாயிடம் சொட்டு நீர் பாசன மேலாண்மை, கரும்பு வளர்ப்பு, பயிரிடும் முறை, காலம் ஆகியவற்கை குறித்தும் கலந்துரையாடினார்.

தொடர்ந்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கதிரம்பட்டி ஊராட்சி நஞ்சானபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ.2.47 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கூறை மற்றும் பள்ளி வகுப்பறை கட்டிட சுவர் மற்றும் மேற்கூரையில் குழந்தைகளுக்கு கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளதையும், மாணவ, மாணவியர்களின் வாசிப்புத்திறனையும் மற்றும் கற்றல்திறனையும் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், ரூ.89,000/- மதிப்பீட்டில் மாணவ, மாணவியர்களுக்கு கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளதையும், நஞ்சனாபுரத்தில் செயல்பட்டு வரும் மண்புழு உரக்கொட்டகையில் மேற்கொள்ளபட்டு வரும் பணியினையும், கதிரம்பட்டி ஊராட்சி மணல்மேடு பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் பயனாளி வீட்டின் கட்டுமான பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, திட்டம் குறித்து பயனாளியுடன் கலந்துரையாடினார்.

தொடர்ந்து, நசியனூர், செம்மாம்பாளையத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளான் வணிகத் துறையின் சார்பில், செயல்பட்டு வரும் ஈரோடு விற்பனை குழு ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மஞ்கள் ஏலம் நடைபெற்று வரும் பணியினை ஆய்வு மேற்கொண்டு மஞ்சள் தரம் மற்றும் மதிப்பீடு குறித்து மஞ்சள் வியாபாரிகளிடம் கலந்துரையாடினார்.

மஞ்சள் ஏலமானது குவியல்களிலிருந்து மாதிரிகளின் அடிப்படைகளில் Alpha மென்பொருள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆண்டொன்றிற்கு ஈரோடு மாவட்டம், வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த 40,000 க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் 500க்கும் மேற்பட்ட வணிகர்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 2024-2025 ஆம் ஆண்டில் 32,398 மெ.டன் அளவிலான மஞ்சள் வர்த்தகம் செய்யப்பட்டு ரூ.3.92 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.

அனைத்து வேலை நாட்களிலும் மஞ்சள் ஏலம் நடைபெற்று, நாளொன்றிற்கு சராசரியாக 125 மெ.டன் மஞ்சள் வர்த்தகம் செய்யப்பட்டு வருகிறது. 29.04.2020 அன்று முதல் மின்னணு தேசிய வேளாண் சந்தைத் திட்டத்தில் (e.NAM) ஒருங்கிணைக்கப்பட்டது.

ஈரோடு மற்றும் கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் உட்பட 230 வணிகர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

மஞ்சள் வணிக வளாகத்தினுள் 70 தனியார் கிடங்குகளும், அறிக்கையிடப்பட்ட பகுதியினுள் 123 தனியார் கிடங்குகளும் விற்னைக்குழுவின் உரிமம் பெற்று செயல்பட்டு வருகிறது. முன்னதாக, கலெக்டர் , பெருந்துறை வட்டம், சீனாபுரம், சிவன் சக்தி திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமினை நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) லோகநாதன், வேளாண்மை துணை இயக்குநர் / செயலாளர் ஈரோடு விற்பனை குழு சாவித்திரி, ஈரோடு வட்டார வளர்ச்சி அலுவலர் லதா, அம்புரோஸ், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் டி.என்.பி.எஸ்.சி. இலவச பயிற்சி வகுப்பு



ஈரோடு செப் 3-

ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி -சூர்யா அறக்கட்டளை இணைந்து டி என் பி எஸ் சி வகுப்பு (குரூப் 2/ 2A PRELIMS) ஈரோடு கலை அறிவியல் கல்லூரியில் ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி, நகர்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சரும் ஈரோடு தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி, மக்கள் சிந்தனை பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன் சிறப்புரையுடன், விவேகானந்தா ஐஏஎஸ் அகாடமி நிறுவனர் கிருபாகரன் பயிற்சியுடன் நடைபெற்றது. பயிற்சியில் 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில். இளைஞர் அணி நிர்வாகிகள், திமுக மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், கிளை, சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்

நீலகிரி மாவட்டத்தில்

# தாலுகாக்கள், ஊராட்சிகளை பிரிக்க வலியுறுத்தி ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் ஆர்ப்பாட்டம்




ஊட்டி, செப்.3-

நீலகிரி மாவட்டத்தில் தாலுகாக்கள் மற்றும் ஊராட்சிகளை பிரிக்க வேண்டும் என வலியுறுத்தி ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு மாவட்ட தலைவர் சுப்பிரமணி தலைமை தாங்கினார்.

மாநில இணை செயலாளர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் பிரகாஷ் வரவேற்றார். ஆர்ப்பாட்டத்தின் போது கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். இதுகுறித்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கூறியதாவது:-

நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்களுக்கு அடிப்படை தேவைகளை எளிதில் நிறைவேற்றும் வகையில் தாலுகாக்கள் மற்றும் கிராம ஊராட்சிகளை பிரிப்பது தொடர்பாக கடந்த 25 ஆண்டுகளாக அரசுக்கு ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் வலியுறுத்தி வந்தனர். இதனை தொடர்ந்து 2013-14-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தாலுகாக்களை பிரிக்க 110 விதியின் கீழ் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அதற்கான அரசாணை இதுவரை பிறப்பிக்கப்படவில்லை. மேலும், இதற்காக அரசுக்கு தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கம் மாநில மையத்தின் சார்பாகவும் நீலகிரி மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும் பலமுறை கோரிக்கை வைத்தும் எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. இவ்வாறு கூறினர்.

இதில் துணைத் தலைவர்கள் சலீம், ஸ்ரீதரன் ராஜ்குமார், தணிக்கையாளர் ஸ்ரீதர், ஓய்வு பெற்ற ஊரக வளர்ச்சித்துறை சங்க தலைவர் கருணாகரன் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

கண், ரத்த தானம் செய்வீர்



சென்னை திருவிகநகர் மண்டலம் 77வது வார்டில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு, பொதுமக்களிடம் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். இதில் மான்ற உறுப்பினர்கள் சுமதி, வேலு கலந்து கொண்டனர்.

# சென்னை பள்ளி மாணவர்களுக்கான இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி: மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்

**சென்னை,செப்.03**

சென்னை மாநகராட்சி மற்றும் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி இணைந்து நடத்தும் சென்னை பள்ளி மாணவர்களுக்கான இணைய பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சியினை மேயர் ஆர். பிரியா (02.09.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்து, இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கான சின்னம் மற்றும் கையேட்டினை வெளியிட்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி இணைந்து, "இணைய பாதுகாப்பு நமது பொறுப்பு" என்ற தலைப்பில் கோயம்பேடு, விருகம்பாக்கம், புலியூர், நெசப்பாக்கம், கே.கே.நகர், மேற்கு மாம்பலம், சி.ஐ.டி. நகர் சென்னை மேல்நிலைப்பள்ளிகள், சைதாப்பேட்டை சென்னை ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள், ரங்கராஜபுரம், கன்னியப்பநகர், ஜாபர்கான்பேட்டை மற்றும் கண்ணம்மாபேட்டை சென்னை உயர்நிலைப்பள்ளிகள் என 13 சென்னை பள்ளிகளில் 8, 9 மற்றும் 10ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு முதற்கட்டமாக இணைய பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வு பயிற்சியில் மேயர் பேசும்போது தெரிவித்ததாவது:முதலமைச்சர் அவர்கள் கல்வியும், சுகாதாரமும் தன்னுடைய இரு கண்கள் என்று கூறியுள்ளார். அதனடிப்படையில் தமிழ்நாட்டில் கல்விக்காக பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். பள்ளி மாணவர்களுக்கு




பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகம் (Gender and Policy Lab) மூலமாக பாலினச் சமத்துவம் குறித்த விழிப்புணர்வும், பள்ளி மாணவர்கள் அவர்களின் குறிக்கோளை அடைவதற்கு தேவையான மேற்படிப்பு பயில்வதற்கு அறிவுரையும் வழங்கப்படுகிறது. மேலும், மாணவர்களுக்கு பள்ளி படிப்பு மட்டுமில்லாமல் பொது அறிவையும் வளர்த்துக் கொள்ளும் வகையில் கல்விச் சுற்றுலாவும் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் Cyber-Aware Society Together என்ற தலைப்பில் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியுடன் இணைந்து சென்னை பள்ளி மாணவர்களுக்கு இணைய பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மொபைல், டெக்னாலஜி, டிஜிட்டல் சேவை ஆகியவை அதிகமாக இன்றைய காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதாவது, டேட்டாஸ், நோட்ஸ் எடுப்பதற்கும் இப்போது பேப்பர் பயன்படுத்துவது இல்லை. மொபைல் போனில் தான் குறிப்பு எடுத்துக் கொள்கிறார்கள். அவ்வாறு டெக்னாலஜி அதிகமாக வளர்ந்துள்ளது. டெக்னாலஜி வளர்வது என்பது நம்முடைய பாசிட்டிவ் வளர்ச்சிக்காக கட்டமைத்தான். அதிக நேரம் ஒரு வேலையில் ஈடுபடுவதை டெக்னாலஜி மூலமாக விரைவில் முடித்திட டெக்னாலஜி பயன்படுத்தப்படுகிறது.

ஆனால், இப்போது இந்த டெக்னாலஜியை எந்தளவிற்கு தவறான முறையில் கொண்டு செல்ல முடியுமோ, அதற்கென்று ஒரு குழுவே செயல்படுகிறது. அவர்கள் இதனை தவறான முறையில் செயல்படுத்துகிறார்கள். இது போன்ற தவறான டெக்னாலஜி முறைகளில் பள்ளி மாணவர்கள் செல்லக்கூடாது என்பதற்காக இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இதற்காக விழிப்புணர்வு கையேடும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கையேட்டில் நிறைய தலைப்புகளில் மாணவர்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. இதில் முக்கியமாக, ஏஐ டெக்னாலஜி குறித்தும், சிப்பி போட்டோ எடிட்டிங் ஆப் மூலமாக புகைப்படம் பதிவிடும்போது, வாட்ஸ் ஆப் மூலமாக புகைப்படங்கள் அனுப்பும் போதும், பாஸ்வேர்ட்ஸ் பகிரும் போது, நண்பர்களுடன் இருக்கும் வீடியோக்களை பகிரும் போது, எந்தளவிற்கு பாதுகாப்பானதாக இருக்கிறது. எந்தளவிற்கு பாதுகாப்பானதாக இல்லை என்பதை மாணவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

சென்னையில் ஒரு செய்தி பகிர்ந்தால், உடனடியாக உலகளவில் சென்று சேரும் வகையில் இன்றைய தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. 20 முதல் 30 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் இங்கிருந்து பக்கத்து ஊருக்கு ஒரு கடிதம் அனுப்பினால், அது சென்று சேர சில நாட்கள் ஆகும். அப்படியிருந்த காலகட்டம் மாறி தற்போது அனைத்து செய்திகளும் உடனடியாக சென்று சேருகிறது.

இவ்வாறான டிஜிட்டல் தொழில்நுட்ப காலத்தில் எவ்வாறு நாம் அதை கடைப்பிடிக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமானது. அதேபோல் Youtube பார்க்கும் போது தேவையில்லாத சில லிங்க்ஸ் வரும். உங்களுக்கே தெரியாமல் அந்த லிங்கை கிளிக் செய்து விடுவீர்கள். இந்த லிங்கானது தேவையில்லாத இணைப்புகளுக்குள் செல்லும். இவ்வாறான நேரங்களில் எவ்வாறு வெளியில் வர வேண்டும் என்பது குறித்தும், இதிலிருந்து உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள், தொழில் முறை தகவல்கள் இவற்றை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்த வேண்டும் என்பது குறித்தும் இந்தப் பயிற்சி வகுப்பில் சொல்லித் தரப்படும்.

தற்போது எல்லாமே டிஜிட்டல் மயமாக மாறி விட்டது. பள்ளிகளில் ஸ்மார்ட் போர்டுகள், ஸ்மார்ட் டெக்னாலஜி ஆகியவை கொண்டு வரப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பாசிட்டிவ் வழியில் எடுத்துச் செல்ல பயன்படுகிறது. இணைய செயல்பாடுகளில் நெகட்டிவ் விட்டுகளையும் தெரிந்து கொண்டால் தான் இதுகுறித்த விழிப்புணர்வு ஏற்படும்.

சென்னை பள்ளி மாணவர்கள் இந்த விழிப்புணர்வு பயிற்சியினை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் மட்டுமில்லாமல் உங்கள் குடும்பங்களில் உள்ள அனைவருக்கும் டிஜிட்டல் முறையினை எந்தளவிற்கு பாதுகாப்பான முறையில் பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த. விஸ்வநாதன், ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி முதல்வர் சகோதரி ஸ்டெல்லா மேரி, துணை முதல்வர் ஜெயப்பிரியா மற்றும் கல்வி அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# மிலாடி நபி பண்டிகை: வரும் 5-ந் தேதி நீலகிரியில் டாஸ்மாக் மதுக்கடைகளை மூட கலெக்டர் உத்தரவு

**ஊட்டி, செப்.03-**

முகமது நபியின் பிறந்த நாளை மிலாடி நபி என இஸ்லாமியர்கள் கொண்டாடி வருகின்றனர். அன்று புனித நூலான குரானை வாசிப்பதை முக்கியமான கடமையாக கொண்டுள்ளனர். மேலும், ஏழை மக்களுக்கு உணவு, உடைகளையும் தானமாக வழங்குவார்கள்.

இந்நிலையில் மிலாடி நபி பண்டிகை இந்த ஆண்டு வருகிற 5-ந் தேதி கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி அன்றைய தினம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படும் எப்.எல்.1 மதுபான சில்லறை விற்பனை கடைகள், எப்.எல்.2 கிளப் பார்கள், எப்.எல்.3 ஓட்டல் பார்கள் மற்றும் எப்.எல்.3ஏ ஆகியவற்றில் மதுபான விற்பனை நிறுத்தப்பட்டு மூடப்படும்.

ஒருவேளை அன்றைய தினம் உத்தரவை மீறி மதுபானங்களை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட மது விற்பனை உரிமதாரர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் மீது தமிழ்நாடு மதுவிலக்குச்சட்டம்- 1937 மற்றும் சம்மந்தப்பட்ட இதர விதிகளின் கீழ் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

நீலகிரி மாவட்டத்தில், நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள், கிளப்கள் மற்றும் ஓட்டல் பார்கள், தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் ஏதேனும் திறந்திருப்பதாக பொதுமக்களுக்கு தகவல் தெரிந்தால் அது குறித்த விவரத்தை கூடுதல் போலீஸ் கண்காணிப்பாளர், மதுவிலக்கு மற்றும் அமலாக்கம், ஊட்டி (0423-2223802), உதவி ஆணையர் (ஆயம்), நீலகிரி மாவட்டம், (0423-2443693), டாஸ்மாக் மாவட்ட மேலாளர், எடப்பள்ளி, குன்னூர் (0423-2234211) ஆகியோரை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என்று கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவித்துள்ளார்.

# பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது

**ஈரோடு, செப். 3 -**

ஈரோடு, கரூர், திருப்பூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், 2.47 லட்சம் விளை நிலங்களின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணைக்கு முக்கிய நீர் பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதி இருந்து வருகிறது.

இந்நிலையில் நீர்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கடந்த மாதம் 19-ம் தேதி பவானிசாகர் அணை 102 அடியை எட்டியது. இதனை எடுத்து பவானிசாகர் அணைக்கு வரும் உபரிநீர் அப்படியே பவானி ஆறுக்கு திறந்து விடப்பட்டு உள்ளது. இதனால் பவானி ஆறில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தற்போது பவானிசாகர் அணை பகுதியில் மழை பொழிவு இல்லாததால் அணைக்கு வரும் நீர்வரத்து குறைந்துள்ளது. இதனால் அணை நீர்மட்டம் குறைந்து வருகிறது. நேற்று காலை பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 101.42 அடியாக குறைந்தது. அணைக்கு 3,381 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. கீழ்பவானி வாய்க்காலுக்கு 2,300 கன அடியும், தடப்பள்ளி- அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 950 கன அடியும், பவானி ஆற்றுக்கு 100 கன அடியும் என மொத்தம் அணையில் இருந்து 3,350 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதேபோல் மாவட்டத்திலுள்ள மற்ற அணையின் நீர்மட்டமும் தொடர்ந்து குறைந்து வருகிறது. அதன்படி நேற்று காலை நிலவரப்படி குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் 20.01 அடியாக உள்ளது.இதேபோல் வரட்டு பள்ளம் அணையின் நீர்மட்டம் 21.95 ஆகவும், பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 12.79 அடியாகவும் உள்ளது.

# ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கத்தின் கூட்டமைப்பு 27வது பொதுக்குழு கூட்டம்




**ஈரோடு, செப் 3-**

ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் . கூட்டமைப்பின் 27 -ஆவது பொதுக்குழு கூட்டம் அதன் தலைவர் வி.கே.ராஜமாணிக்கம் தலைமையில் கூட்டமைப்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

செயலாளர் ரவிச்சந்திரன், பொருளாளர் முருகானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

வர்த்தகம் மற்றும் தொழில்துறையை மேம்படுத்துவதற்காக அரசு ஈரோட்டில் வாங்குபவர்-விற்பனையாளர் கூட்டத்தை நடத்த வேண்டும். ஜவுளி மீதான ஜிஎஸ்டி வரியை 5 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்க வேண்டும்.

வணிகர்களுக்கு மின்னஞ்சல் அல்லது வாட்ஸ்அப்புக்கு பதிலாக எழுத்துப்பூர்வமாக எந்த தகவலும் அனுப்பப்பட வேண்டும்.

25 கிலோவுக்கும் குறைவான உணவு தானியங்களுக்கான ஜிஎஸ்டி, அரிசித் தவிடு மீதான ஜிஎஸ்டி, சூரிய சக்தி பேனலில் நெட்வொர்க் கட்டணம், மின் கட்டணம் மற்றும் நிலைக் கட்டண உயர்வு, புதிய வர்த்தக உரிம விதி முறை மற்றும் வரி, வர்த்தக நிறுவனங்களில் சோதனைகள் ஆகியவற்றை திரும்பப் பெற வேண்டும்.

வர்த்தக கண்காட்சி வளர்ச்சி மையம், தகவல் தொழில்நுட்ப பூங்கா ஈரோட்டில் நிறுவப்பட வேண்டும்.

அமெரிக்க அரசின் 50 சதவீத இறக்குமதி வரி உயர்வுக்கு இணையாக வரி மானியத்தையும், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வாங்குபவர்களால் வைத்திருக் கும் ரூ.3,000 கோடிக்கும் அதிக மான கடனால் பாதிக்கப்பட்ட உற்பத்தியாளர்களுக்கு வட்டியில்லா கடனையும் மத்திய அரசு வழங்க வேண்டும்.

பதிவுச் சான்று ரத்து செய்யப்பட்ட வர்த்தகர்களுக்கு விரைவு அஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

# திம்பம் மலைப்பாதை தடுப்பு சுவரில் படுத்திருந்த சிறுத்தை வாகன ஓட்டிகள் அச்சம்

**தாளவாடி,செப்.3 -**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன. இதில் புலி, சிறுத்தை, யானை, மான், கரடி, காட்டெருமை உள்ளிட்ட பல்வேறு வன விலங்குகள் வசிக்கின்றன. இந்த வனப்பகுதி வழியாக அமைந்துள்ள சத்தியமங்கலம் - மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் பண்ணாரி அம்மன் கோவிலை அடுத்துள்ள அடர்ந்த வனப்பகுதியில் 27 கொண்டை ஊசி வளைவுகளுடன் கூடிய திம்பம் மலைப்பாதை அமைந்துள்ளது. திம்பம் மலைப்பாதையில் அவ்வப்போது இரவு நேரங்களில் சிறுத்தைகள் நடமாடுவது வழக்கம். இந்த நிலையில் நேற்று இரவு 27 -வது கொண்டை ஊசி வளைவு அருகே சாலையோர தடுப்புச் சுவரில் ஒரு சிறுத்தை படுத்து இருந்தது. அப்போது அவ்வழியே சென்ற வாகன ஓட்டிகள் சிறுத்தை நடமாட்டத்தை கண்டு அச்சம் அடைந்தனர். வாகன ஓட்டி ஒருவர் சிறுத்தை நடமாட்டத்தை செல்போனில் வீடியோ பதிவு செய்தார். சிறிது நேரம் சாலையோரம் நடமாடிய சிறுத்தை பின்னர் அடர்ந்த வனப்பகுதிக்குள் சென்று மறைந்தது. இது குறித்து வனத்துறையினர் கூறும் போது,திம்பம் மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் சிறுத்தை நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது. இந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் மிகவும் கவனத்துடன் செல்ல வேண்டும். குறிப்பாக இருசக்கர வாகனங்கள் செல்பவர்கள் முடிந்த அளவு இரவு நேர பயணத்தை தவிர்ப்பது நல்லது என்றனர்.

# சூளைமேடு பகுதியில் மழைநீர் வடிகால் பள்ளத்தில் தவறி விழுந்து பெண் பலி

**சென்னை செப் 03-**

சென்னை சூளைமேடு வீரபாண்டி நகர் 1வது தெருவில் மாநகராட்சி சார்பில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது மழை காரணமாக தண்ணீர் தடையின்றி வெளியேறும் வகையில் மழைநீர் வடிகால் பள்ளத்தின் சிலப் அமைக்கப்படமால் இருந்துள்ளது. அதற்கு பதில் மழைநீர் வடிகால் பள்ளத்தின் மேல் மரப்பலகையை வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று காலை 8 மணி அளவில் அப்பகுதியில் நடந்து சென்ற பொதுமக்கள், தற்செயலாக பள்ளத்தில் பார்த்தபோது, நைட்டி அணிந்து இருந்த 40 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் தலைகீழாக கிடந்தார். உடனே பொதுமக்கள் அவரை மேலே தூக்கி பார்த்த போது, அவர் தலையில் பலத்த காயமடைந்து சுயநினைவின்றி இருந்தார்.

உடனே 108 ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு சோதனை செய்த போது, பெண் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர்.

பின்னர் சம்பவம் குறித்து தகவல் அறிந்த சூளைமேடு போலீசார் விரைந்து வந்து பெண்ணின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அதேநேரம் இறந்த பெண் யார் என்பது குறித்து விசாரணை நடத்திய போது, அப்போது சாலையோரம் வசித்து வந்த பெண் என தெரியவந்துள்ளது.

இருந்தாலும் அவர் யார் என்பது குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஈரோட்டில் இருந்து வெளிநாடுகளுக்கு பார்சல்கள் அனுப்ப தபால் அலுவலகத்தில் சிறப்பு வசதி

**ஈரோடு, செப். 3 -**

ஈரோட்டில் இருந்து வெளிநாடுகளுக்கு பார்சல்கள் அனுப்ப தபால் அலுவலகத்தில் சிறப்பு வசதி செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஈரோடு முதுநிலை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் கோபாலன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

ஈரோடு அஞ்சல் கோட்டத்தில் ஈரோடு, பவானி, கோபி ஆகிய 3 தலைமை அஞ்சலகங்கள் மற்றும் 61 துணை அஞ்சலகங்கள் உட்பட 64 கணினிமயமாக்கப்பட்ட அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வெளிநாடுகளுக்கு பார்சல் அனுப்பும் வசதி உள்ளது. அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பார்சல் நிலவரத்தை ஆன்லைன் மூலம் எளிதில் தெரிந்து கொள்ளலாம். இந்திய அஞ்சல் துறையின் மூலம் மிக குறைந்த செலவில், பாதுகாப்பாகவும், விரைவாகவும் பார்சல்கள் சென்றடைவதால், வெளிநாட்டில் உள்ள தங்களது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பார்சல்கள் அனுப்ப பொதுமக்கள் அஞ்சல் நிலையங்களை நாடி வருகின்றனர். உலகெங்கிலும் 106 நாடுகளுக்கு விரைவு தபால் சேவையும், 200 நாடுகளுக்கு வான்வழி பார்சல் சேவைகளும், 46 நாடுகளுக்கு ஐடிபிஎஸ் எனப்படும் சேவைகளும் இந்திய அஞ்சல் துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. ஈரோடு தலைமை அஞ்சலகத்தில் வெளிநாடுகளுக்கு பார்சல் அனுப்புவதற்கு அஞ்சல் துறை சார்பில் பேக்கிங் செய்ய சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் சிறிய மற்றும் பெரிய வணிக நிறுவனங்களுக்கு எளிய வகையில் வெளிநாடுகளுக்கு பார்சல் அனுப்ப ஏதுவாக டிஎன்கே எனும் சிறப்பு வசதியும் உள்ளது. எனவே, ஈரோடு மாவட்டத்திலுள்ள பொதுமக்கள், வணி க நிறுவனங்கள் அருகிலுள்ள கணினிமயமாக்கப்பட்ட அஞ்சல் அலுவலகங்கள் மூலம் இந்த சேவையை பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



வளசரவாக்கம் மண்டலம் 147 வது வார்டுக்கு உட்பட்ட ஆலப்பாக்கம் தந்தை பெரியார் பூங்கா மேம்பாட்டு பணியை மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் துவக்கி வைத்தார் . உடன் வட்ட செயலாளர் எஸ்.ஜி.மாதவன் உதவி பொறியாளர் முருகானந்தம் மற்றும் பலர் உள்ளனர்.



திருவலஞ்சுழி கபர்தீஸ்வரர் கோவிலில் 16 ஆண்டுகளுக்கு பிறகு வரும் 4ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இதையொட்டி யாகசாலை பூஜைகள் நடைபெற்றது.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
இராமநாதபுரம்
எம்.சி.ஓ.பி.எண் 127/2023
வசந்தி மற்றும் மூவர்
..... மனுதாரர்கள்
-எதிர்-
பாண்டியராஜன்,
த/பெ.சோமு
219, மெஹர் அலி தெரு
வெள்ளலூர்
கோயம்புத்தூர்-641111
..... 1-ம் எதிர்மனுதார்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர்கள் விபத்து நஷ்டஈடு கோரி தங்கள் பேரிலும், வழக்கில் கண்ட 2-ம் எதிர்மனுதார் பேரிலும் ஷை வழக்குத்தாக்கல் செய்துள்ளதில் ஷை வழக்கில் 1-ம் எதிர்மனுதாரராகிய தாங்கள் ஆஜராவதற்கு எதிர்வரும் 25.9.2025 அன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் தாங்கள் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமோ மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு ஆஜராக வேண்டியது என்றும், தவறும் பட்சத்தில் மேற்படி விசயமாய் தங்களுக்கு எதிராக ஒருதலைப் பட்ச உத்தரவு ஏற்படக்கூடும் என்றும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.
த.மு.அருண்கண்ணன் பி.ஏ.பி.எல்.
அ.மகேந்திரன் பி.காம்.பி.எல்.
சி.பாபு பி.ஏ.பி.எல்.
ஆர்.பிரீத்தி பி.ஏ.பி.எல்.
வழக்கறிஞர்கள்
இராமநாதபுரம்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தமிழ்நாடு அரசு
பேரூராட்சிகள் துறை, மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்
ந.க.எண். 59 / 2018/ நாள்: 01.09.2025

தேனி மாவட்டம் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் 2025-2026 ஆம் நிதியாண்டில் பாதாள சாக்கடை முடிவுற்ற பகுதியிலும் பாதாள சாக்கடை இல்லாத பகுதியிலும் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைப்பு பணிகள் செய்ய தகுதியான ஒப்பந்ததாரரிடமிருந்து பணிகள் வாரியாக ஒப்பந்தபுள்ளி வரவேற்கப்படுகின்றன (இரண்டு உறை முறைகள்)

1) தேனி மாவட்டம் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் கீழ்க்கண்ட பணிகளுக்கு பேரூராட்சி செயல் அலுவலரால், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணிகள் வாரியாக தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | போடி தேவாரம் சாலை எட்டு இடங்களில் (தனலட்சுமி நகர் மற்றும் சீனியம்மாள் நகரில்) தார்ச்சாலை அமைத்தல் | 60.00 |
| 2. | வார்டு எண் 6 பட்டாளம்மன் கோவில் வடக்கு தெரு, இராஜாஜி தெரு, ரெங்கசாமி தெரு, பட்டாளம்மன் கோவில் நடுத் தெரு 1, 2 மற்றும் 3 பட்டாளம்மன் கோவில் தெற்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 70.00 |
| 3. | வார்டு எண் 11 பாரதியார் தெரு, பாரதிதாசன் தெரு 1, 2 மற்றும் 3 இல் சிமெண்ட் சாலை அமைத்தல் | 70.00 |
| 4. | வார்டு எண் 12 வினோபாஜி காலனி 1, 2, 3, 4, 5 மற்றும் 6 இல் சிமெண்ட் சாலை அமைத்தல் | 70.00 |
| 5. | வார்டு எண் 13 அறிஞர் அண்ணா தெரு 2 குறுக்கு தெரு மற்றும் தெரு எண் 3 இல் தார்ச்சாலை அமைத்தல் | 70.00 |
| 6. | வார்டு எண் 15 நேருஜி கிழக்கு தெருவில் தார்ச்சாலை அமைத்தல் | 70.00 |

2. பணி வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

3. பொதுவான நேரம் மற்றும் நாள்.

| | | |
|---|---|---|
| அ | ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்தல் | 03.09.2025 காலை 10.00 மணி முதல் 19.09.2025 மாலை 3.00 மணி வரை |
| ஆ | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 19.09.2025 மாலை 3.00 மணி வரை |
| இ | ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 19.09.2025 மாலை 3.30 மணி |

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

செயல் அலுவலர்
மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.
செ.ம.தொ.இ / 4857 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு - பொதுப்பணித்துறை
கண்காணிப்புப்பொறியாளர் அலுவலகம், பொபது, மரபு கட்டடங்கள் வட்டம், சென்னை –5.
முதல் அழைப்பு
ஒப்பந்தபுள்ளி அறிவிக்கை எண்: 14/ மகவ / 2025–26, நாள்: 25.08.2025.
மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிக்கை – மொத்த வகை/ ஒரு உறை முறை

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொபது, மரபு கட்டடங்கள் வட்டம், சேப்பாக்கம், சென்னை -5, அவர்களால் கீழ்கானும் பணிகளுக்கு பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து மின்னனு ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (வரிகள் உட்பட) | முன்வைப்பு தொகை மற்றும் பணிகள் முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தகாரர்கள் | முன்வைப்பு தொகை வரவு வைத்து கட்டவேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள பழைய நகராட்சி கட்டிடத்தின் பாரம்பரிய கட்டிடத்தின் பாதுகாப்பு, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு. | ரூ.174.00 இலட்சம் | ரூ. 1,74,000 09 மாதங்கள் | வகுப்பு –IV மற்றும் அதற்கு மேல் (திருத்திய பணவரம்பின் படி) | முன்வைப்புதொகை மின்னனு பணப்பரிமாற்ற முறையில் இணைய தளத்தில் செய்திடல் வேண்டும் |

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவிறக்கம் செய்வதற்கான தொடக்க நாள் மற்றும் நேரம்: 01.09.2025 பிற்பகல் 03.00 மணி முதல். ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணைய வழியில் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 15.09.2025 பிற்பகல் 03.00 மணி வரை. ஒப்பந்தப்புள்ளிகள் இணையத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 15.09.2025 பிற்பகல் 03.30 மணி அளவில். ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் http://tntenders.gov.in என்ற இணைய தளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் இணைய தளம் வாயிலாகவே ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். முன்வைப்பு தொகை இல்லாமல் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் உடனடியாக நிராகரிக்கப்படும். கூடுதல் தகவல்களுக்கு http://tntenders.gov.in என்ற இணைய தளத்தினை பார்வையிடவும்.

செ.ம.தொ.இ/4865/ஒப்பந்தப்புள்ளி/2025 கண்காணிப்புப்பொறியாளர், பொபது, மரபு கட்டடங்கள் வட்டம், சென்னை -5.

தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை
[illegible]
"https://tntenders.gov.in" [illegible]
171.70
96,000
180 நாட்கள்
[illegible]

### ஆசியக்கோப்பை உடற்தகுதி சோதனை:

# ரோகித் , சுப்மன் கில் தேர்ச்சி பெற்றார்களா?



**பெங்களூரு, செப். 03-**

உடற்தகுதி சோதனையில் ரோகித் , சுப்மன் கில் இருவரும் தேர்ச்சி பெற்றனர்.

**வரும் 9-ம் தேதி...**

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி செப்டம்பர் 9-ந் தேதி ஐக்கிய அரபு அமீரகத்தில் தொடங்குகிறது. இந்த போட்டிக்கான இந்திய அணி வருகிற 4-ந் தேதி துபாய் செல்கிறது. இதற்கிடையே, இந்திய அணியின் சுப்மன் கில் வைரஸ் காய்ச்சல் காரணமாக துலீப் கோப்பை போட்டியில் பங்கேற்காமல் சண்டிகாரில் உள்ள தனது வீட்டில் ஓய்வு எடுத்து வந்தார். இதனால் அவர் ஆசிய போட்டிக்கு தயாராகும் பொருட்டு பெங்களூருவில் உள்ள இந்திய கிரிக்கெட் வாரியத்தின் சிறப்பு மையத்தில் நடைபெறும் உடற் தகுதி சோதனையில் பங்கேற்றார். மேலும் ஜஸ்பிரித் பும்ரா, வாஷிங்டன் சுந்தர், யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஷர்துல் தாக்குர் ஆகியோரும் உடற்தகுதி சோதனையில் பங்கேற்றனர்.

**உடற்தகுதி சோதனை...**

இதேபோல் இந்திய ஒரு நாள் போட்டி அணியின் கேப்டன் ரோகித் சர்மா, வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ் ஆகியோர் அக்டோபர் மாதம் நடைபெறும் ஆஸ்திரேலிய தொடருக்கு தங்களது உடற்தகுதியை சோதனைக்கு உட்படுத்தினர். இந்நிலையில் உடற்தகுதி சோதனை முடிவுகள் வெளியாகி உள்ளன. அதன்படி ஆசிய கோப்பைக்கான இந்திய அணியில் இடம் பெற்றுள்ள டெஸ்ட் கேப்டன் சுப்மன் கில், வேகப்பந்து வீரர் பும்ரா ஆகியோருக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் சிறப்பு மையத்தில் நடத்தப்பட்ட சோதனையில் இருவரும் தேர்ச்சி பெற்றனர்.

**ஜெய்ஸ்வால், தாக்குர்...**

இதே போல ஒரு நாள் போட்டிக்கான கேப்டன் ரோகித் சர்மாவும் உடல் தகுதி சோதனையில் தேர்ச்சி பெற்றார். சுப்மன் கில் ஆசிய கோப்பைக்கான இந்திய அணியின் துணை கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். காய்ச்சல் காரணமாக துலிப் டிராபி போட்டியில் இருந்து அவர் விலகினார். இதனால் அவருக்கு உடல் தகுதி சோதனை கட்டாயமாக்கப் பட்டது. அத்துடன் வாஷிங்டன் சுந்தர், யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஷர்துல் தாக்குர் ஆகியோரும் உடற்தகுதி சோதனையில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

### நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஆப்கானுக்கு

# 15 டன் உணவுப்பொருட்களை அனுப்பி இந்தியா உதவிக்கரம்

**புதுடெல்லி, செப். 03-**

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை தொடர்ந்து உதவிக்கரம் நீட்டியது இந்தியா. 15 டன் உணவுப் பொருள்கள், 1,000 டெண்ட்டுகள், உயிர்காக்கும் மருந்துப் பொருட்கள், அத்தியாவசிய பொருட்களை இந்தியா நிவாரண உதவியாக அனுப்பி வைத்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் குனார் என்ற மாகாணம் உள்ளது. இது பாகிஸ்தானை ஒட்டிய பகுதியாகும். இது பெரும்பாலும் மலைகள் நிறைந்த இடமாகும். இங்குள்ள வீடுகளில் பெரும்பாலானவை மண்ணால் கட்டப்பட்டவை ஆகும். இதற்கிடையே கடந்த 3 தினங்களுக்கு முன்பு இரவு 11.47 மணிக்கு குனார் மாகாணத்தில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6 புள்ளிகளாக பதிவாகி இருந்தது. நங்கர்ஹார் மாகாணத்தில் நுலாலாபாத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டிடங்கள் இடிந்து தரை மட்டமாகின. இரவில் அனைவரும் தூங்கிக்கொண்டு இருந்த நேரத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் 800-க்கும் மேற்பட்டவர்கள் மண்ணில் புதைந்து பலியாகினர் என்று ஆப்கானிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. மேலும் 2,500-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இதில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை உயரக்கூடும் என்று தெரிகிறது. இதில் நூர்குல், சோகி, வாட்பூர்மனோகி, சபதாரே ஆகிய மாவட்டங்களில் மட்டும் 250 பேர் பலியானதாக கூறப்படுகிறது.சாலை வழியாக சென்று மீட்புப்பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. பல இடங்களில் கட்டிட இடிபாடுகள் சூழ்ந்திருப்பதால் சாலை மூலமாக பாதிக்கப்பட்ட இடங்களை அடைய முடியவில்லை. எனவே மீட்புக்குழு தவித்து வருகிறது. இருப்பினும் குறிப்பிட்ட மீட்புக் குழுவினர் ஹெலிகாப்டர் மூலமாக சென்று தங்களது பணியை மேற்கொண்டு வருகின்றனர்.இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் 800-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில், மனிதாபிமான அடிப்படையில் 15 டன் உணவுப் பொருள்கள், 1,000 டெண்ட்டுகள், உயிர்காக்கும் மருந்துப் பொருட்கள், அத்தியாவசிய பொருட்களை இந்தியா நிவாரண உதவியாக அனுப்பி வைத்துள்ளது. மேலும் தேவையான உதவிகள் அளிக்க தயார் எனவும் இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### ட்ரம்ப் விதித்த வரி காரணமாக திருப்பூர் தவிக்கிறது:

# நிவாரணங்களை உடனடியாக அறிவித்து, ஆவன செய்யுங்கள்

### பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

**சென்னை, செப். 03-**

ட்ரம்ப் விதித்த வரி காரணமாக இந்தியாவின் பல மாநிலத் தொழிலாளர்களுக்கும் வாழ்வளிக்கும் டாலர் சிட்டி திருப்பூர் தவிக்கிறது என்று தெரிவித்துள் முதல்வர் முக ஸ்டாலின், நிவாரணங்களை உடனடியாக அறிவித்து, ஆவன செய்யுங்கள் என்று பிரதமர் மோடியை முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது: மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கண்டன ஆர்ப்பாட்டம் மாபெரும் வெற்றி. பிரதமர் மோடி அவர்களே, தாங்கள் ஆதரித்த ட்ரம்ப் விதித்துள்ள வரி விதிப்பு காரணமாக, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும், இந்தியாவின் பல மாநிலத் தொழிலாளர்களுக்கும் வாழ்வளிக்கும் டாலர் சிட்டி திருப்பூர் தவிக்கிறது.

குஜராத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் ரஷ்ய கச்சா எண்ணெய் கிடைப்பதற்காக, பல ஆயிரம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் எங்கள் ஏற்றுமதியாளர்களை நீங்கள் பரிதவிக்க விடுவது எந்த விதத்தில் நியாயம்? நான் ஏற்கெனவே, கடிதத்தில் கூறிய நிவாரணங்களை உடனடியாக அறிவித்து, ஆவன செய்யுங்கள்.

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வு கண்டு, விஸ்வகுரு எனும் தங்கள் பட்டப் பெயருக்கு நியாயம் செய்யுங்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்து உணர்வுகளைப் பதிவு செய்த அனைத்துக்கட்சி தலைவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் பொதுமக்களுக்கும் நன்றி என்று பதிவிட்டுள்ளார்.

# உள்நாட்டு உற்பத்தியில் தமிழகம் இரட்டை இலக்க வளர்ச்சி

### அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்

**சென்னை, செப். 03-**

வருவாய், நிதிப் பற்றாக்குறை குறைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார். மேலும் உள்நாட்டு உற்பத்தியில் இரட்டை இலக்க வளர்ச்சியை தமிழ்நாடு பெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொலைநோக்கு திட்டங்கள் செயலாக்கம் குறித்து அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, சிவசங்கர், கோவி. செழியன் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது:- மத்திய அரசின் நிதிப்பங்களிப்பு முறையாக இல்லாத நிலையில் கூட தமிழ்நாடு அரசு சிறப்பாக அதனை எதிர்கொண்டுள்ளது. நான்கரை ஆண்டுகளில் பல தொலைநோக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி இரட்டை இலக்க அளவில் வளர்ந்துள்ளது. வருவாய் பற்றாக்குறையும் குறைக்கப்பட்டு நிதிப் பற்றாக்குறையும் 3% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தேர்வாணயங்கள் மூலம் ஒரு லட்சம் பேருக்கு பணி வழங்கப்பட்டுள்ளது. உலக அளவில தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக ரூ.10.28 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 32.23 லட்சம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

52.07 மில்லியன் டாலர் அளவுக்கு நம் ஏற்றுமதி உயர்ந்துள்ளது. ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. காலை உணவுத் திட்டம், விடியல் பயணம் திட்டம் ஆகியவை மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. பல நெருக்கடிகளை தாண்டி மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

மவின் 505 தேர்தல் வாக்குறுதிகளில் 364 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 40 திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. மொத்தம் 404 திட்டங்கள் தற்போது செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மத்திய அரசிடம் 37 திட்டங்கள் நிலுவையில் உள்ளன. 64 திட்டங்கள் நடவடிக்கைக்கு எடுத்துக்கொள்ள முடியாதவையாக உள்ளது.

வேலூர், கரூர், ஒசூர், ராமநாதபுரம் ஆகிய நகரங்களில் புதிய விமான நிலையங்கள் அமைப்பதற்கான பணிகளைத் தொடங்கியுள்ளோம். 3 லட்சம் பேருக்கு நான் முதல்வன் உள்ளிட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் பணிகள் வழங்கப்பட்டுள்ளன. காலை உணவுத் திட்டத்தின் மூலம் மாணவர்களின் வருகை 9% உயர்ந்துள்ளது. மாணவர்கள் பள்ளிக்கு குறித்த நேரத்தில் வருவது 98%-ஆக உயர்ந்துள்ளது. ரூ.6,000 கோடியில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 235 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடியல் பயணத்தில் தினசரி சராசரியாக 65 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். 3,700 புதிய பேருந்து வாங்கப்பட்டுள்ளன. 2,200க்கும் மேற்பட்ட பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் 45,000 கி.மீ. தொலைவிற்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 7,400 ஏக்கர் கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ரூ.7,658 கோடி மதிப்பிலான கோயில் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. 4,500 விளையாட்டு வீரர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளன. 76 சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிட மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

உள்நாட்டு உற்பத்தியில் இரட்டை இலக்க வளர்ச்சியை தமிழ்நாடு பெற்றுள்ளது. மின்னணு பொருள் ஏற்றுமதியில் முதலிடம், ஏற்றுமதி தயார் நிலை குறியீடு, தோல் ஜவுளி பொருள் ஏற்றுமதியில் தமிழகம் முதலிடம். மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கைகளிலும் பல்வேறு துறைகளிலும் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 52,514 ஆக உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

### ஆசிய கோப்பை ஹாக்கி:

# சூப்பர் 4 சுற்றுக்கு இந்தியா தகுதி



**ராஜ்கிர், செப். 03-**

ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் சூப்பர் 4 சுற்றுக்கு இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

**லீக் ஆட்டம்...**

பீகார் மாநிலம் ராஜ்கிரில் ஆடவர் ஆசிய கோப்பை ஹாக்கி தொடர் நடைபெற்று வருகிறது. இதில் 'ஏ' பிரிவில் நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா - கஜகஸ்தான் மோதின. இதில் இந்திய அணி 15-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இது இந்திய அணிக்கு ஹாட்ரிக் வெற்றியாக அமைந்தது. இதன் மூலம் 9 புள்ளிகளுடன் தனது பிரிவில் முதலிடம் பிடித்து சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறியது இந்திய அணி. இதே பிரிவில் சீனா 4 புள்ளிகளுடன் 2-வது இடம் பிடித்து சூப்பர் 4 சுற்றில் நுழைந்தது.

**17வருடங்களுக்கு...**

2026-ல் இந்தியாவில் உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்: உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி வரும் 2026-ம் ஆண்டு ஆகஸ்டில் டெல்லியில் நடத்தப்படும் என உலக பாட்மிண்டன் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. மதிப்புமிக்க இந்தத் தொடர் 17வருடங்களுக்குப் பிறகு இந்தியாவில் நடைபெற உள்ளது. கடைசியாக இந்தத் தொடர் 2009-ம் ஆண்டு ஐதராபாத்தில் நடைபெற்றது.

# ஜிம்பாப்வே அணி அறிவிப்பு

இலங்கை கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இலங்கை முழுமையாக கைப்பற்றியது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையே 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர் நடைபெறுகிறது. அதன்படி முதல் டி20 போட்டி ஹராரேயில் இன்று நடைபெறுகிறது.இந்நிலையில் இந்த தொடருக்கான ஜிம்பாப்வே அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சிக்கந்தர் ராசா தலைமையிலான அந்த அணியில் சீன் வில்லியம்ஸ், பிரண்டன் டெய்லர் போன்ற முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

ஜிம்பாப்வே அணி விவரம்: சிக்கந்தர் ராசா (கேப்டன்), பிரையன் பென்னட், ரியான் பர்ல், பிராட் எவன்ஸ், ட்ரெவர் குவாண்டு, கிளைவ் மடாண்டே, டினோடெண்டா மபோசா, தடிவானாஷே மருமணி, வெலிங்டன் மசகட்சா, டோனி முனியோங்கா, தஷிங்கா முசெகிவா, பிளெஸ்சிங் முசரபானி, டியான் மியர்ஸ், ரிச்சர்ட் ங்கராவா, பிரெண்டன் டெய்லர், சீன் வில்லியம்ஸ்.

# ஆப்கானிஸ்தான் முதல் வெற்றி

அடுத்த சீசனுக்கான இண்டர்நேஷனல் லீக் (ஐ.எல்.) டி20 கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் டிசம்பர் 2-ந் தேதி முதல் அடுத்த ஆண்டு (ஜனவரி) 4-ந் தேதி வரை நடக்கிறது. இந்த போட்டிக்கான வீரர்கள் ஏலம் வருகிற 30-ந் தேதி துபாயில் நடக்கிறது. இந்த ஏலத்தில் கலந்துகொள்ள வீரர்கள் தங்களது பெயரை பதிவு செய்ய வருகிற 10-ந் தேதி கடைசி நாளாகும். ஐ.பி.எல். பாணியில் 6 அணிகள் இடையே நடைபெறும் இந்த போட்டியில் பங்கேற்க, ஐ.பி.எல். போட்டியில் இருந்து சமீபத்தில் ஓய்வு பெற்ற தமிழகத்தை சேர்ந்த முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஆர்.அஸ்வின் முடிவு செய்துள்ளார்.

இந்த போட்டிக்கான வீரர்கள் ஏலத்தில் தனது பெயரை பதிவு செய்ய போட்டி அமைப்பாளர்களுடன் அஸ்வின் பேசியதாக தகவல் வெளியானது. இது குறித்து அஸ்வினிடம் கேட்ட போது, 'ஆம், நான் போட்டி அமைப்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறேன். ஏலத்தில் பதிவு செய்தால் என்னை ஏலத்தில் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்' என்றார்.

# தொடரை தவறவிடும் கம்மின்ஸ்

இந்திய கிரிக்கெட் அணி வரும் அக்டோபர் மாதம் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர்களில் விளையாட உள்ளது. இதில் முதலில் ஒருநாள் போட்டிகளும் பின்னர் டி20 தொடரும் நடைபெற உள்ளது.

இந்நிலையில் இந்தியாவுக்கு எதிரான இந்த தொடரை ஆஸ்திரேலிய டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணியின் கேப்டனான பேட் கம்மின்ஸ் தவறவிடுகிறார். முதுகு வலி பிரச்சினையால் அவதிப்பட்டு வரும் அவர் ஆஷஸ் டெஸ்ட் தொடருக்கு முழு உடற்தகுதியுடன் இருக்க வேண்டும் என்பதால் இந்த முடிவை எடுத்துள்ளார்.

# ஏலத்தில் பங்கேற்கும் அஸ்வின்

அடுத்த சீசனுக்கான இண்டர்நேஷனல் லீக் (ஐ.எல்.) டி20 கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் டிசம்பர் 2-ந் தேதி முதல் அடுத்த ஆண்டு (ஜனவரி) 4-ந் தேதி வரை நடக்கிறது. இந்த போட்டிக்கான வீரர்கள் ஏலம் வருகிற 30-ந் தேதி துபாயில் நடக்கிறது. இந்த ஏலத்தில் கலந்துகொள்ள வீரர்கள் தங்களது பெயரை பதிவு செய்ய வருகிற 10-ந் தேதி கடைசி நாளாகும். ஐ.பி.எல். பாணியில் 6 அணிகள் இடையே நடைபெறும் இந்த போட்டியில் பங்கேற்க, ஐ.பி.எல். போட்டியில் இருந்து சமீபத்தில் ஓய்வு பெற்ற தமிழகத்தை சேர்ந்த முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஆர்.அஸ்வின் முடிவு செய்துள்ளார்.


இந்த போட்டிக்கான வீரர்கள் ஏலத்தில் தனது பெயரை பதிவு செய்ய போட்டி அமைப்பாளர்களுடன் அஸ்வின் பேசியதாக தகவல் வெளியானது. இது குறித்து அஸ்வினிடம் கேட்ட போது, 'ஆம், நான் போட்டி அமைப்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறேன். ஏலத்தில் பதிவு செய்தால் என்னை ஏலத்தில் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்' என்றார்.

# மிச்செல் ஸ்டார்க் திடீர் ஓய்வு

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் மிச்செல் ஸ்டார்க். இவர் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் 65 போட்டிகளில் ஆடி 79 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இந்நிலையில், சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக மிச்செல் ஸ்டார்க் அறிவித்துள்ளார். 2027 சர்வதேச ஒருநாள் உலகக்கோப்பை, டெஸ்ட் போட்டிகளில் கவனம் செலுத்தவுள்ளதால் டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக மிச்செல் ஸ்டார்க் அறிவித்துள்ளார்.

### அமெரிக்க ஓபன் டென்னிஸ்:

# காலிறுதிக்கு சின்னர், அனிசிமோவா தகுதி



**நியூயார்க், செப். 03-**

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு சின்னர் மற்றும் அனிசிமோவா முன்னேற்றியுள்ளனர்.

**4-வது சுற்றில்...**

'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 4-வது சுற்று ஆட்டம் ஒன்றில் இத்தாலி வீரர் ஜானிக் சின்னர் - ரஷிய வீரர் அலெக்சாண்டர் பப்ளிக் ஆகியோயர் மோதினர். பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய சின்னர் 6-1,6-1,6-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதனால் அவர் காலிறுதிக்கு முன்னேறினார்.

**ஸ்வியாடெக் உடன்...**

'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடந்து வருகிறது. இதில் இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 4-வது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்க வீராங்கனையான அனிசிமோவா - பிரேசிலின் பீட்ரிஸ் ஹடாட் மையா உடன் மோதினார். இதில் முழுவதும் ஆதிக்கம் செலுத்திய அனிசிமோவா 6-0 மற்றும் 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். இவர் காலிறுதியில் இகா ஸ்வியாடெக் உடன் பலப்பரீட்சை நடத்த உள்ளார்.

# நியூசி.க்கு புதிய பயிற்சியாளர்

நியூசிலாந்து அணியின் பேட்டிங் மற்றும் ஃபீல்டிங் பயிற்சியாளராக கிரைக் மெக்மில்லன் நியமிக்கப்பட்டுள்ளார். ஐசிசி மகளிர் ஒரு நாள் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் வருகிற செப்டம்பர் 30 முதல் தொடங்குகிறது. இந்த தொடரானது இந்தியா மற்றும் இலங்கையில் நடத்தப்படுகிறது. விரைவில் ஒருநாள் உலகக் கோப்பைத் தொடர் தொடங்கவுள்ளதால், அனைத்து அணிகளும் தீவிரமாக பயிற்சி மேற்கொண்டு வருகின்றன. இந்த நிலையில், நியூசிலாந்து அணியின் பேட்டிங் மற்றும் ஃபீல்டிங் பயிற்சியாளராக அந்த அணியின் முன்னாள் ஆல்ரவுண்டரான கிரைக் மெக்மில்லன் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு டி20 உலகக் கோப்பையை வென்ற நியூசிலாந்து மகளிரணியின் பயிற்சியாளர்கள் குழுவில் மெக்மில்லன் அங்கம் வகித்துள்ளார். 48 வயதாகும் மெக்மில்லன் நியூசிலாந்து அணிக்காக 55 டெஸ்ட், 197 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 7500 ரன்களுக்கும் அதிகமாக குவித்துள்ளார். நியூசிலாந்து மகளிரணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டது குறித்து கிரைக் மெக்மில்லன் பேசியதாவது: நியூசிலாந்து அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. நியூசிலாந்து அணியுடன் இணைந்து மீண்டும் செயல்படவுள்ளது உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

### இ.பி.எஸ். சுற்றுப்பயணம்:

# அமைச்சர் சேகர்பாபு விமர்சனம்

**பூந்தமல்லி, செப். 03-**

தோல்வி பயத்தாலேயே அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி சுற்றுப்பயணம் செய்து வருகிறார். இந்த சுற்றுப்பயணத்தால் எழுச்சியும் இல்லை, பலனும் இல்லை என இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு விமர்சித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை அருகே குத்தம்பாக்கத்தில் புதிய புறநகர் பேருந்து முனையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அப்பணியின் இறுதிக் கட்ட பணிகளை நேற்று காலை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, பணிகளை துரிதமாக முடித்திட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தினார் அமைச்சர் சேகர்பாபு பிறகு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: குத்தம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையத்தில் இருந்து 300 சென்னை மாநகரப் பேருந்துகள், 600 எஸ்இடிசி பேருந்துகள், 50 கே.எஸ்.ஆர்.டி.சி பேருந்துகள், 36 அண்டை மாநில பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

இந்த பேருந்துகளில், வார நாட்களில் 30 ஆயிரம் பயணிகளும், விடுமுறை காலங்களில் 40 ஆயிரம் பயணிகளும், விழா காலங்களில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளும் பயணிப்பர். இந்த பேருந்து முனையம் வருகிற நவம்பர் இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டுக்காக அர்ப்பணிக்கப்பட உள்ளது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தொடங்கியுள்ள சுற்றுப்பயணம் தோல்வி பயத்தையே காட்டுகிறது. அந்தப் பயணத்தால் எழுச்சியும் இல்லை, பலனும் இல்லை. 'மக்களைக் காப்போம்- தமிழகத்தை மீட்போம்' என்பதற்கு பதிலாக, 'சம்பாதித்ததை காப்போம்- சம்மந்தியை மீட்போம்' என்று வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலர் காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் பிரகாஷ், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பிரதாப், பூந்தமல்லி எம்எல்ஏ கிருஷ்ணசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

### 2023-ம் ஆண்டு ஆசிரியர் தகுதி தேர்வு:

# புதிய ஆசிரியர் பணிக்கு பணி நியமன கலந்தாய்வு அறிவிப்பு

**சென்னை, செப். 03-**

2023-ம் ஆண்டு ஆசிரியர் தகுதி தேர்வு தகுதி பெற்று ஆசிரியர் பணிக்கு காத்திருப்பவர்களுக்கு, பணி நியமன கலந்தாய்வு அறிவிக்கப்பட்டுள்ளது. 2,511 பணியிடங்களை நிரப்புவதற்கு வரும் 3, 4 தேதிகளில் பணி நியமன கலந்தாய்வு நடைபெறும் என்று பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் தகுதி தேர்வு மூலம் தகுதி பெற்று 2500 பேர் வரை வேலை வாய்ப்புக்காக காத்திருக்கின்றனர். இவர்களுக்கு ஏற்கனவே சான்றிதழ் சரிபார்ப்பு முடிக்கப்பட்ட நிலையில், வழக்கு காரணமாக பணிநியமனம் செய்யப்படாமல் இருந்தனர். இந்த நிலையில், இந்த வழக்கில் தீர்ப்பு வந்த நிலையில், உடனடியாக பணி நியமன கலந்தாய்வு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி வரும் 3, 4 தேதிகளில் சென்னையில் பணி நியமன கலந்தாய்வு நடைபெறும் என்று பள்ளிக் கல்வித்துறை அறிவித்துள்ளது.

# சினிமா CiNi செய்திகள்

## இம்மாதம் வெளியாகும் 'மிராய்'



தேஜா சஜ்ஜா, மஞ்சு மனோஜ், ஜெகபதி பாபு, ஷ்ரியா சரண், ஜெயராம் நடிப்பில், கார்த்திக் கட்டம்னேனி இயக்கி ஒளிப்பதிவு செய்திருக்கும் படம் "மிராய்". பீபிள் மீடியா பேக்டரி தயாரித்துள்ள இப்படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில், தேஜா சஜ்ஜா பேசியபோது . மிராய் திரைப்படம் இம்மாதம் 12ம் தேதி வெளியாகிறது. 3 வயது முதல் 80 வயது வரை உள்ள அனைவரும் இப்படத்தை ரசிப்பார்கள். பீபிள் மீடியா பேக்டரி நிறுவனத்துடன் இரண்டாவது முறையாக இணைகிறேன். இயக்குனர் கார்த்திக் கட்டம்னேனி அவர்களால் தான் இது சாத்தியமானது. அவருடைய திரைக்கதை தான் இப்படத்தை சிறப்பித்துள்ளது. AGS நிறுவனத்துடன் முதல் முறையாக இணைந்திருப்பதில் மகிழ்ச்சி. மிராய், என்றால் "எதிர்காலத்தின் நம்பிக்கை" என்று அர்த்தம். படத்தில் இன்னொரு அர்த்தமும் உள்ளது; அது ஒரு ட்விஸ்ட் என்றார். மேலும், இப்படத்தில் VFX பெரும் சவாலாக இருந்தது. இப்படம் சர்வதேச அளவிற்கு உயர வேண்டும் என்பதற்காக, ஹிமாலயா, இலங்கை போன்ற இடங்களுக்கு சென்று சண்டைக் காட்சிகளை படமாக்கியுள்ளோம் என்றார்.

## நாளை மறுநாள் வெளியாகும் 'பேட் கேள்'




இளம் வயது பெண்ணை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ள படம் பேட் கேள். தமிழ் கலாச்சாரத்தை கெடுக்கும் வகையில் இருப்பதாக ஒரு சிலர் விமர்சித்து வந்த நிலையில், மற்றொரு தரப்பினர் இந்த நவீன காலகட்டத்திற்கு இத்திரைப்படம் தேவைநான ஒன்று என வாதிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இப்படம் வரும் வெள்ளியன்று திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதனிடையே

இப்படத்தின் செய்தியாளர் சந்திப்பு சென்னை சமீபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் பேசிய வெற்றிமாறன், இயக்குனர் வர்ஷா மிகவும் ஹைபர் மோட்டிவேஷனலானால் ஆன நபர். அவர் முதலில் நெட்பிளிக்ஸ் போன்ற ஓடிடி தளங்களுக்கு படம் செய்ய தான் இருந்தது. ஆனால் ஒரு புரடெக்ஷன் ஹவுஸ் இருந்தால் நல்ல இருக்கும் என நினைத்து நாங்கள் இந்த படத்திற்கு உள்ளே வந்தோம். தணிக்கை துறை படத்திற்கு U/A 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் பார்க்கலாம் என்கிற சான்றிதழை பெற்றுள்ளோம். கிராஸ்ரூட் ஃபிலிம்ஸ் சார்பில் ஏற்கனவே எடுக்கப்பட்ட ஆண்ட்ரியா நடித்த 'மனுஷி' என்கிற திரைப்படம் பல்வேறு வழக்குகளை சந்தித்து உள்ளது. இரண்டு முறை தணிக்கை செய்யப்பட்டுள்ளது. தற்போது தான் அந்த படத்திற்கான பிரச்சினை ஓரளவுக்கு முடிந்துள்ளது.


அதே போல் இந்த திரைப்படத்திற்கும் பல்வேறு பிரச்சினைகள் இருந்தது. ஆகவே இந்த Bad Girl திரைப்படத்துடன் தயாரிப்பு பணியை நிறுத்திக் கொள்கிறேன். கிராஸ்ரூட் ஃபிலிம்ஸ் கடையை சாத்திக் கொள்கிறேன்" என அறிவித்தார்.

## செப். 19 அன்று வெளியாகும் 'போலீஸ் போலீஸ்' திரைப்படம்



ஹாட்ஸ்டார் ஸ்பெஷல் சீரிஸாக உருவாகி இருக்கும் 'போலீஸ் போலீஸ்' வெப்தொடர் வரும் செப்டம்பர் 19 அன்று ஜியோ ஹாட்ஸ்டாரில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ரசிகர்கள் மத்தியில் நன்கு வரவேற்பு பெற்ற இதன் முதல் புரோமோவில் மிர்ச்சி செந்தில் (ராஜா) மற்றும் ஜெயசீலன் தங்கவேல் (முரளி) இருவரும் முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள் என்பது இடம் பெற்றிருந்தது. தற்போது வெளியாகி இருக்கும் புதிய புரோமோவில் ஷபானா ஷாஜகான் நேர்மையான வழக்கறிஞர் லலிதாம்பிகா கதாபாத்திரத்தில் அறிமுகமாகிறார். இந்தத் தொடரில் நடிகர்கள் மிர்ச்சி செந்தில், சுஜிதா தனுஷ், ஜெயசீலன் தங்கவேல், ஷபானா ஷாஜகான், சத்யா, வின்செண்ட் ராய் மற்றும் பலர் நடித்துள்ளனர். ஹாட்ஸ்டார் ஸ்பெஷல்ஸாக உருவான 'ஆஃபிஸ்' மற்றும் 'ஹார்ட்பீட் சீசன்2' போன்றே இந்த 'போலீஸ் போலீஸ்' இருக்கும் என படக்குழு தெரிவித்துள்ளது.

## அருப்புக்கோட்டை : சாய்பாபா கோவிலில் வருடாபிஷேகம்



**அருப்புக்கோட்டை, செப். 03-**

அருப்புக்கோட்டை அருகே பந்தல்குடி அன்பு மாடல் நகரில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ சீரடி சாய்பாபா ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் 8 ம் ஆண்டு வருடாபிஷேக விழா நிகழ்ச்சி நேற்று கோலாகலமாக நடைபெற்றது. விழாவின் துவக்கமாக 1008 பால்குடம் எடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பெண்கள் விரதம் இருந்து பால்குடம் சுமந்து கோவில் வளாகம் சுற்றி வந்து ஸ்ரீ குரு சாய்பாபாவிற்கு பால் அபிஷேகம் செய்தனர். அத்துடன் தேர் சுற்றிவரும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. தேரில் உற்சவர் சிறப்பு அலங்காரத்தில் அமர்ந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார். இஸ்லாமிய தம்பதியர், இந்து பக்தர்களுடன் இணைந்து தேரை இழுத்து துவக்கி வைத்து மத நல்லிணக்கத்துடன் தேர் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சிவ தாண்டவம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்த வருடாபிஷேக விழாவில் அருப்புக்கோட்டை, பந்தல்குடி, வாழ்வாங்கி, சேதுராஜபுரம், சிதம்பராபுரம், கொப்புசித்தம்பட்டி உள்ளிட்ட சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை டிரஸ்ட் தலைவர் மனிதத் தேனி சுந்தரமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை அமைச்சர் அர.சக்கரபாணி பெற்றுக்கொண்டார்



**ஒட்டன்சத்திரம், செப். 03-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொருளூரில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொருளூர், வாகரை, அப்பிபாளையம், பாலப்பன்பட்டி ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை அமைச்சர் அர. சக்கரபாணி பெற்றுக் கொண்டார். அதனைத்தொடர்ந்து,

இந்த முகாமில் மகளிர் சுய உதவி குழுவிற்கு கடன் உதவி, பயனாளிகளுக்குபுதிய குடும்ப அட்டை, தூய்மை பணியாளர்களுக்கு பணியாளர் உபகரணங்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் கண்ணன், வட்டாட்சியர் சஞ்சய் காந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள்குமரன், தாஹிரா, மாவட்டத் துணை செயலாளர் ராஜாமணி, பொதுக்குழு உறுப்பினர் தங்கராஜ், ஒன்றிய செயலாளர்கள் தங்கம், பொன்ராஜ் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கலைச் செல்விஇராசு, பரமேஸ்வரி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்த்ராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தண்டபாணி, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் செல்வகுமார் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## உங்களுடன் ஸ்டாலின் முகாம்: அருப்புக்கோட்டையில் கலெக்டர் நேரில் ஆய்வு



**அருப்புக்கோட்டை, செப். 03-**

அருப்புக்கோட்டை நகராட்சி காடு காமாட்சி அம்மன் கோவில் மண்டபத்தில் வார்டு எண் 7, 22, 24 ஆகிய வார்டு பகுதி மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இந்த முகாமை அருப்புக்கோட்டை நகர்மன்ற தலைவர் சுந்தரலட்சுமி , முன்னாள் தலைவர் சிவபிரகாசம் துவக்கி வைத்தனர். அருப்புக்கோட்டை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ் முன்னிலை வகித்தார்.நகராட்சி ஆணையாளர் ராஜமாணிக்கம் வரவேற்று பேசினார்.

இந்த முகாமில் மின்வாரியம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, நகராட்சி, சிறுபான்மையினர் நலத்துறை என 13 துறை அரங்குகள் அமைக்கப்பட்டு பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டது.

இதில் ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு மனுக்கள் வழங்கி வந்த நிலையில் மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா திடீரென இந்த முகாமில் நேரில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது பொதுமக்களுக்கு முகாமில் அரசின் சேவைகள் எவ்வாறு வழங்கப்படுகிறது என்பது குறித்து ஆய்வு செய்து முகாம் பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும் முகாமில் பதிவு செய்த பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது. இந்த முகாமில் நகர்மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி, நகரக்கழகச் செயலாளர் ஏ.கே.மணி, நகர்மன்ற உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட கலந்து கொண்டனர்

## மதுரை, பாலமேடு பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்
### வெங்கடேசன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



**அலங்காநல்லூர், செப். 03-**

மதுரை மாவட்டம் பாலமேடு பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் தொடங்கி வைத்தார். இதில் 9 முதல் 15 வார்டுகள் வரை உள்ள பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த முகாமில் பட்டா மாற்றுதல், பென்சன், மகளிர் உரிமைத் தொகை, மருத்துவ காப்பீடு, ஆதார், உள்ளிட்ட பல்வேறு மனுக்களை அந்தந்த துறைச் சார்ந்த அரங்குகளில் உள்ள அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றனர். மேலும் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்களது கோரிக்கை மனுக்களை சட்டமன்ற உறுப்பினரிடம் வழங்கினர்.

இந்த முகாம் நிகழ்ச்சியில் தாசில்தார் ராமச்சந்திரன்,சமூக நலத்திட்ட தாசில்தார் பார்த்திபன்,பேரூராட்சி செயல் அலுவலர் சசிகலா, மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் பாலசுப்ரமணியன், ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், முத்தையன், பேரூராட்சி தலைவர்கள் சுமதி பாண்டியராஜன், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், துணைத் தலைவர் ராமராஜ், பேரூர் செயலாளர் மனோகரவேல் பாண்டியன்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு, சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தவசதீஷ், மேற்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் ராம்குமார், மற்றும் அனைத்து வார்டு கவுன்சிலர்கள், பேரூராட்சி பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நத்தத்தில் கட்டுமான தொழிலாளர்கள் சங்கம் சார்பில் பிரச்சார இயக்கம்



**நத்தம், செப். 03-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் பஸ்நிலையம் முன்பாக இந்தியகட்டுமான தொழிலாளர்கள் சங்கம் சார்பில் பிரச்சார இயக்கம் நடந்தது. இதற்கு மாவட்ட துணை செயலாளர் குழந்தைவேல் தலைமை தாங்கினார்.சங்க நிர்வாகிகள் ராமன், பவுன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் உக்ரைன்- ரஷ்யா, இஸ்ரேல்- காசா நாடுகளுகிடையே போர் வேண்டாம், அமைதி வேண்டும் என்றும், ஏகாதிபத்தியம் ஒழிக என்றும் கோஷங்கள் எழுப்பபட்டது. இதில் சங்க நிர்வாகிகள் துரை, அன்னராஜ் உள்ளிட்ட கட்டுமான சங்க ஒன்றிய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

## வத்தலக்குண்டு அருகே உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**வத்தலக்குண்டு, செப். 03-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே உங்களுடன் .ஸ்டாலின் திட்ட முகாம் நடந்தது.வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம்கணவாய்ப்பட்டி ஊராட்சிக்கான 'உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் புதுப்பட்டி தனியார் திருமண மண்டபத்தில்நடந்தது.

முகாம்துவக்க விழாவுக்கு நிலக்கோட்டை ஆதிதிராவிடர் நல தாசில்தார் சிவகுமார் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சி செயலாளர்ஜெயச்சந்திரன் ,வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குப்புசாமி, முருகேசன், , வத்தலக்குண்டு தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் கே.பி.முருகன், கனிக்குமார், கனகதுரை கணவாய்ப்பட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ரமேஷ்ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் புவனேஸ்வரி வரவேற்றார்.

முகாமில் வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய துணவட்டார வளர்ச்சி அலுவலர் சுமதி வருவாய் ஆய்வாளர் பரிமளா, கிராம நிர்வாக அதிகாரிகள் செந்தில்குமார், சரண்யா நாகேந்திரன், வருவாய், மின்சாரம், வேளாண், சமூக நலம், கூட்டுறவு உள்ளிட்ட 15 துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் துறை ரீதியான மனுக்களை பெற்றுக் கொண்டு உடனுக்குடன் ஆன்லைன் மூலம் பதிவு செய்தனர்.

முகாமில் தி.மு.க. நிர்வாகிகள் , கார்த்திக், சகாப்தின், ராஜ்குமார், சின்னா, ஷாஜகான், செல்வகுமார் , ரமேஷ் துரை, தமிழன் ரவி, கார்த்திக் யுவன், மற்றும்பொதுமக்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர் நாச்சியப்பன் தொகுத்து வழங்கினார். முடிவில் கணவாய்ப்பட்டி ஊராட்சிசெயலாளர் முத்துக்குமார்நன்றி கூறினார். பாதுகாப்பு ஏற்பாடுகளை வத்தலக்குண்டு போலீசார் செய்திருந்தனர்.

## நத்தத்தில் தேங்காய் விலை உயர்வு

**நத்தம், செப். 03-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் சுற்று வட்டார கிராம பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை மரங்கள் விவசாயிகளால் பராமரிக்கபட்டு வருகிறது.

இந்நிலையில் கடந்த சில மாதங்களாகவே தேங்காய் வரத்து குறைந்து போனது. இதனால் நத்தத்தில் தேங்காய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தற்போது தேங்காய் குடோன்களில் ஒரு தேங்காய் ரூ.25 முதல் ரூ.27 வரையிலும், கமிஷன் கடைகளில் ரூ.30 முதல் ரூ.35 வரையிலும் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும் சில்லரை விற்பனை கடைகளில் ஒரு தேங்காய் ரூ.40 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பொதுமக்கள் அதிர்ச்சியும், விவசாயிகள் மகிழ்ச்சியும் அடைந்துள்ளனர்.

## திருமங்கலம் நகரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்: நகராட்சி சேர்மன் தொடங்கி வைத்தார்



**திருமங்கலம், செப். 03-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமினை நகராட்சி சேர்மன் மு.ரம்யா முத்துக்குமார் தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார்.

தமிழக அரசு தங்களது பிரதான மக்கள் நலத் திட்டங்களை பொது மக்களிடம் கொண்டு சேர்த்திடும் வகையிலும், கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தில் அதிக அளவிலான பயனாளர்களை இணைக்க வேண்டும் என்ற நோக்கத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் மாநிலம் முழுவதிலும் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த முகாம்களில் ஜாதி சான்றிதழ், பிறப்பு சான்றிதழ், பட்டா மாறுதல், பென்ஷன் தொடர்பான மாற்றங்கள், மகளிர் உரிமைத் தொகை விண்ணப்பம், மருத்துவ காப்பீடு அட்டை பெறுவது, ஆதார் அட்டையில் திருத்தங்கள்,ரேஷன் கடையில் மாற்றங்கள் என பல்வேறு சேவைகளை பொது மக்கள் இந்த முகாம்களில் எளிதாக பெற்றுக் கொள்ள முடியும்.

இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் நகர் கொடி அரங்கினில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமில் நகர் மன்ற தலைவர் மு.ரம்யா முத்துக்குமார் சிறப்பாளராக கலந்து கொண்டு முகாமினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார்.

பின்னர் இந்த முகாமில் பெறப்படுகிற பொதுமக்களின் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுத்து திட்டத்தினை சிறப்புடன் நடத்திடுமாறு அதிகாரிகளை நகராட்சி சேர்மன் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வினில் திருமங்கலம் வட்டாட்சியர் சுரேஷ் பிரெடரிக் கிளமெண்ட் ,நகராட்சி ஆணையாளர் அசோக் குமார் சுகாதார அலுவலர் (பொ) சிக்கந்தர், சுகாதார ஆய்வாளர் வனஜா மற்றும் நகராட்சி கவுன்சிலர்கள் சின்னச்சாமி, திருக்குமார், பெல்ட் முருகன், ஜஸ்டின் திரவியம், பல்துறை அரசு அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.



ஜெர்மனியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாடு மற்றும் தொழில் அதிபர்களுடனான சந்திப்பில் மொத்தம் 7,020 கோடி ரூபாய் முதலீட்டில் 15,320 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 26 நிறுவனங்களுடன் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.



ஜெர்மனி நாட்டின் டசல்டார்ப் நகரில் அமைந்துள்ள கிளாசிக் ரிமய்ஸ் அரிய வகை கார்களுக்கான மையத்தில் உலகின் முதல் கார், பழமையான பந்தயக்கார் உள்ளிட்டவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்.

# தமிழ்நாடுதான் இந்தியாவின் ஜெர்மனி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, செப். 03-

இந்தியா பொருளாதாரத்தின் இதயதுடிப்பு தமிழ்நாடு என்று தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடுதான் இந்தியாவின் ஜெர்மனி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கு அதிக முதலீடுகளை ஈர்க்கவும், இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் தொழில் முதலீடுகளை ஈர்த்திட அரசு முறை பயணமாக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்றுள்ளார்.

ஜெர்மனி டசெல்டோர்ப் நகரில் நார் பிரெம்ஸ், நார் டெக்ஸ், குழுமம், இ.பி.எம்.-பாப்ஸ்ட் ஆகிய 3 நிறுவனங்களுடன் ரூ.3,201 கோடி முதலீட்டில் 6,250 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின், பி.எம்.டபுள்யூ. குழும நிறுவன உயர் அலுவலர்களுடன், தமிழ்நாட்டில் அந்த நிறுவனத்தின் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வது குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்த நிலையில், நேற்று நடைபெற்ற டி.என் ரைஸிங் ஜெர்மனி முதலீட்டு மாநாட்டில் ரூ.3,819 கோடி மதிப்புள்ள 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தாகியுள்ளன. இதன்மூலம் 9,000க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜெர்மனி பயணத்தில் மொத்தம் ரூ.7,020 கோடி மதிப்புள்ள 26 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், 15,000க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனி முதலீட்டு மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- என்னுடைய முதல் ஜெர்மனி பயணத்தில் அதுவும் இந்தியா என்ற மிகப்பெரிய ஜனநாயக நாட்டில் இருக்கின்ற தமிழ்நாடு மாநிலத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சராக, இந்த முதலீட்டாளர்கள் சந்திப்பில் பங்கேற்பதை பெருமையாக நான் நினைக்கிறேன்; பெருமகிழ்ச்சியோடு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

உலகின் முன்னணி தொழில் வல்லரசுகளில் ஒன்றாகவும், நவீன உற்பத்தி, துல்லிய பொறியியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மோட்டார் வாகன தொழில்நுட்பம் ஆகியவற்றில் வலிமையோடு, ஐரோப்பாவின் முதுகெலும்பாக இருக்கின்ற ஜெர்மனிக்கு, முதலீடுகளை ஈர்ப்பதற்காக வந்திருக்கக்கூடிய இந்த நேரத்தை நான் பெருமையாக நினைக்கிறேன்.

தமிழ்நாட்டை பற்றி உங்களுக்கெல்லாம் நான் சொல்ல வேண்டும் என்றால், தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரம்! இந்தியாவிலேயே அதிகமான டபுள் டிஜிட் பொருளாதார வளர்ச்சியையும், உற்பத்தித்துறை வளர்ச்சியையும் அடைந்திருக்கின்ற ஒரே மாநிலம்! இந்தியாவிலேயே அதிகப்படியாக, 48 விழுக்காடு நகர்மயமான மாநிலம்! அதிகளவிலான தொழிற்சாலைகளும், பணியாளர்களும் இருக்கக்கூடிய மாநிலம்.

ஜெர்மனி போலவே தமிழ்நாட்டுக்கு என்று பெரிய வரலாறும், பாரம்பரியமும் இருக்கிறது. தமிழும், ஜெர்மனும் உலகின் பழமையான மொழிகளில் முக்கியமானவை. தமிழுக்கு என்று மிகப்பெரிய இலக்கியத் தொன்மையும், மரபும் இருக்கிறது. ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இரும்பின் பயன்பாடு தமிழ் நிலத்தில் இருந்ததற்கான ஆய்வறிக்கைகள் இருக்கிறது! இப்படிப்பட்ட மாநிலத்தில் தொழில் தொடங்க உங்களை எல்லாம் நான் அழைக்கிறேன்.

ஜெர்மனி மீது எனக்கு என்ன ஈர்ப்பு என்றால், உங்களுடைய பண்பாடு, தொழில் நுணுக்கம், புத்தாக்க வலிமை போன்றவை வியப்பை ஏற்படுத்துகிறது. உங்களுடைய கலையுணர்வை, ஒவ்வொரு கட்டடத்திலும், தெருக்களிலும் பார்த்து நான் ரசிக்கிறேன். பியூட்டிபுல் லேண்ட்ஸ்கேப், வைப்ரண்ட் கல்ச்சர் இதுதான் ஜெர்மனி.

எங்கள் தமிழ்நாட்டிலும் பல ஜெர்மனி நிறுவனங்கள் தொழில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பி.எம்.டபுள்யூ, டெல்காம் போன்ற பல்வேறு ஃபார்ச்சூன் 500 நிறுவனங்கள் தலைமையிடமாக கொண்டு செயல்படும் ஜெர்மனிதான், இந்தியாவின் வணிக உறவு மேற்கொள்ளும் ஐரோப்பிய நாடுகளில் முதன்மையான நாடு! மைடு இன் ஜெர்மனியை எப்படி தரத்தின் அடையாளமாக உலகம் முழுவதும் பார்க்கிறார்களோ, அப்படி, மைடு இன் தமிழ்நாடு என்பதும் தரமும், திறனும் கொண்ட ஒரு பெயராக உருவாகிக் கொண்டிருக்கிறது. சைக்கிள் முதல் பாட்டில் டாங் வரை நாங்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறோம்.

ஜெர்மனி மற்றும் தமிழ்நாட்டுக்கு இடையில் பொருளாதாரத்தில் நிறைய ஒற்றுமைகள் இருக்கிறது. ஜெர்மனி எப்படி ஐரோப்பிய யூனியனின் முக்கிய தொழில் துறை நாடோ, அதேபோல, இந்திய ஒன்றியத்தில் தொழில்துறையின் இதயத்துடிப்பாக தமிழ்நாடு மாநிலம் விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் சொன்னால், தமிழ்நாடுதான் இந்தியாவின் ஜெர்மனி. இவ்வாறு அவர் கூறினார்.



தமிழ்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு வருகை தந்த ஜனாதிபதி திரௌபதி முர்முவை விமான நிலையத்தில் நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பூங்கொத்து வழங்கி வரவேற்றார். இந்நிகழ்வின்போது கவர்னர் ஆர்.என்.ரவி உடனிருந்தார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி ‘மக்களை காப்போம்-தமிழகத்தை மீட்போம்’ என்ற தொடர் பிரச்சார சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக நேற்று மதுரை மேலூரில் கூடியிருந்த தொண்டர்கள் இடையே பேசினார். அருகில் திருப்பரங்குன்றம் எம்.எல்.ஏ. ராஜன்செல்லப்பா, மேலூர் எம்.எல்.ஏ. பி.பெரியபுள்ளான் ஆகியோர் உள்ளனர்.

# 7,020 கோடி ரூபாய் மதிப்பீட்டில்... (1-ம் பக்க தொடர்ச்சி)

சேவைகள் பி.ஏ.எஸ்.எப். சுற்றுச்சூழல் கேட்டலிஸ்ட் மற்றும் மெட்டல் சொல்யூஷன்ஸ் அதன் செங்கல்பட்டு உற்பத்தி ஆலையை விரிவுபடுத்துகிறது. இந்த நிறுவனம் வினையூக்கிகள், உறிஞ்சிகள், பேட்டரி பொருட்கள் மற்றும் விலை மதிப்பற்ற உலோக தீர்வுகளில் சேவைகளை அளித்துவருகிறது. கியர் இல்லாத நேரடி இயக்கி தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற்ற ஜெர்மனி காற்றாலை உற்பத்தியாளரான வென்சிஸ் எனர்ஜி ஏஜி, தமிழ்நாட்டில் காற்றாலை பாகங்கள் உற்பத்தி ஆலையை அமைக்கிறது.

சுரங்கப்பாதை துளையிடும் எந்திரங்களில் உலகளாவில் முன்னணி நிறுவனமான ஹெர்ரென்க்னெக்ட், அதன் சென்னை ஆலையை விரிவுபடுத்துகிறது. மும்பை கடற்கரை சாலை மற்றும் சென்னை மெட்ரோ போன்ற திட்டங்களை இந்நிறுவனம் அதன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் பாகங்கள் மூலம் செயல்படுத்தும்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பி.எம்.டபிள்யூ. குழுமத்தின் மூத்த தலைவர்களுடன் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்வது குறித்து கலந்துரையாடினார். அப்போது ஆட்டோமோடிவ் மற்றும் மின்சார வாகன உற்பத்தியில் தமிழ்நாட்டின் சிறப்பினை எடுத்துரைத்து, பி.எம்.டபிள்யூ. நிறுவனம் அதன் செயல்பாட்டை தமிழ்நாட்டில் அதிகப்படுத்திட அழைப்பு விடுத்தார்.

இச்சந்திப்பின்போது, பி.எம்.டபிள்யூ. குழும நிறுவனத்தின் மூத்த தலைவர்கள், தமிழ்நாட்டின் வலுவான மின்சார வாகன உட்கட்டமைப்பை மேற்கோள் காட்டியது, மாநிலத்தின் மீதான அந்நிறுவனத்தின் ஆர்வத்தை மீண்டும் உறுதிப்படுத்தியது.

ஜெர்மனியின் இரட்டை தொழில் பயிற்சி மாதிரியை தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்காக நெக்ஸ்ட் மிட்டல்ஸ்டாண்ட் (ஆஸ்பில்டங்) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. 120 மாணவர்களுடன் தொடங்கி அடுத்த 10 ஆண்டுகளில் 20 ஆயிரமாக அதிகரிக்கும் இந்த திட்டம், தமிழ்நாட்டு இளைஞர்களிடையே உலகளாவிய திறன் தரத்தை உயர்த்தும்.

முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஐரோப்பா பயணம் அடுத்த கட்டமாக இங்கிலாந்து நாட்டில் தொடரும், அங்கு மேலும் பல முதலீட்டாளர்கள் சந்திப்புகள் மற்றும் இங்கிலாந்து வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்வுகளும் நடைபெறும்.

இந்நிகழ்வின்போது தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் டாக்டர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை மூலமாக பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீராங்கனைகளுக்கு வருவாய் துறையில் பணியாற்றுவதற்கான பணி நியமன ஆணைகளை நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.



மதுரை அருள்தாஸ்புரத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமில் நேற்று தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக்கொண்டார். அருகில் மேயர் இந்திராணி, ஆணையாளர் சித்ரா விஜயன், மாமன்ற உறுப்பினர்கள் மகாலெட்சுமி, கஜேந்திரகுமார் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் குத்தம்பாக்கத்தில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்தின் முன்னேற்ற பணிகளை நேற்று அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, சா.மு.நாசர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆய்வின்போது கூடுதல் தலைமைச்செயலாளர் காகர்லா உஷா, சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, முதன்மைச்செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் ஆகியோர் உள்ளனர்.